# காரை கைவிட்டு கொலையாளிகள் தப்பிவிட்டனர்

COLLEGE ... MAY 1970 ... UNDERGRADUATE LIB...

Registered as a NewsPaper in Ceylon    விலை சதம் 15 ★ ★

ஈழநாடு

THE EELANADU

National Tamil Daily

தபால் பெட்டி எண் 49    மலர் 12
போன்: 389    இதழ்: 82
தேசிய தினசரி

யாழ்ப்பாணம் சித்திரை 21    மலர் 27    திங்கட்கிழமை    [4-5-70]

அருந்துங்கள்!
அண்ணா
கோப்பி
அண்ணா தொழிற்சாலை
இணுவில்

கொழும்பு, ஞாயிறு
செனட்டர் கே. எம். பி. ராஜரத்தினவுடன் காரில் பிரயாணம் செய்த இருவரைச் சுட்டுக் கொன்ற கொலையாளிகள் பிரயாணம் செய்த கார் கண்டு பிடிக்கப்பட்டுள்ளது.

நேற்று பிற்பகல் செனட்டர் ராஜரத்தின பிரயாணம் செய்த காரில் அவருடன் இருந்த இருவரைச் சுட்டுக் கொன்றுவிட்டு பறந்துமறைந்த கொலையாளிகளின் கார் கல்கிசைப்பகுதியில் கைவிடப்பட்ட நிலையில் கிடக்கக்கண்டு பிடிக்கப்பட்டது இதில் பிரயாணம் செய்த கொலையாளிகள் தலைமறைவாகியுள்ளனர் இவர்களை பற்றியதகவல்களை அறிவதில் பொலிசார் தீவிரமாக இறங்கியுள்ளனர்.

நேற்று பலப்பிட்டியாவில் வழக்கொன்றில் ஆஜராகிவிட்டு செனட்டர் ராஜரத்தினவும் மற்றஇருவரும் காரில் கொழும்புக்கு வந்து கொண்டிருந்தனர். காரின் பின்ஆசனத்தில் செனட்டர் அமர்ந்திருந்தார். முன் ஆசனங்களில் கார் ஓட்டியும், பலப்பிட்டிய வழக்கில் எதிரியும் இருந்தனர் கார் தெஹிவளை பாலத்தை அண்மிய போது வேறொரு கார் அதனை முந்திசென்று இடை மறித்து நின்றது. அதிலிருந்து செனட்டரின் காரை நோக்கி துப்பாக்கிப்பிரயோகம் செய்யப்பட்டது. செனட்டர் ராஜரத்தின காரின் தளத்தில் பதுங்கிக் கொண்டார். அதனால் அவர் தெய்வாதீனமாக உயிர்தப்பினார்.

துப்பாக்கிப் பிரயோகம் செய்தவர்களின் கார் கண்ணிமைக்கும் நேரத்தில் சென்று மறைந்துவிட்டது. இதில் பிரயாணம்செய்தவர்கள் யார் என்பதைக் கண்டு பிடிப்பதில் பொலிஸார் தீவிரமாக ஈடுபட்டுள்ளார்கள்

# தேர்தல் துண்டுப்பிரசுரங்கள்; பொலிசார் தீவிர கண்காணிப்பு

## குலைப்பாளர் தீர்மானிக்கும் வரை பற்றுவரவு செய்யமுடியாது

யாழ்ப்பாணம், திங்கள்
குலைப்பாளர் ஒரு தீர்மானம் எடுக்கும்வரை, ஐக்கிய லாபநிதி சங்கத்தில் பணம் கட்டியவர்கள் எதுதவி பற்றுவரவுகளையும் செய்ய முடியாது என அறிவிக்கப்பட்டுள்ளது.

தினமும், சங்கத்தில் பற்றுவரவு உள்ளவர்களில் பலர் பணம் பெறும் பொருட்டு, கிராமப்புறங்களிலிருந்து வந்து கஷ்டப்படுகின்றனர். குலைப்பாளர் தீர்மானத்தின் பின்னரே, எவ்வித முடிவும் எடுக்கப்படுமென இவர்களுக்கு அறிவிக்கபபட்டுள்ளது.

சங்கத்தின்பற்றுவரவுகளை பரிசீலனை செய்ய குலைப்பாளராக திரு. பீ. சண்முகரத்தினம் நியமிக்கப்பட்டுள்ளார்

## மழையா? அது என்ன?

ஜெயப்பூர், மே 3
ராஜஸ்தான் தார் பாலைவனப் பிரதேசத்தில் இருக்கும் 400 கிராமங்களில் சென்ற ஏழு ஆண்டுகளில் பிறந்த குழந்தைகளுக்கு மழை என்றால் என்னவென்றே தெரியாது என ராஜஸ்தான் நிதி மந்திரி திரு. மதுரதாஸ் மதுர் கூறினார்.

இந்தக கிராமங்களில் கடந்த ஏழு ஆண்டுகளாக ஒரு சொட்டு மழைகூட பெய்யவில்லையென அவர் மேலும் சொன்னார்.

## அரசியல் ஆசிரியர்கள், பஸ் பிரசாரகர்கள் மீதும் நடவடிக்கை

யாழ்ப்பாணம், திங்கள்

**தேர்தல் துண்டுப்பிரசுரங்கள் சம்பந்தமாக சில வேட்பாளர்கள் பொலிசாருக்குப் புகார் செய்திருப்பதைத் தொடர்ந்து தேர்தல் சட்ட விதிகளின் 52(ஏ) 58(ஏ) பிரிவின் கீழ் உடனடியாக நடவடிக்கை மேற்கொள்வதற்கு வடபகுதி பொலிஸ் அதிபர் திரு. ஆர் சுந்தரலிங்கம் வடபகுதியிலுள்ள சகல பொலிசாருக்கும் உத்தரவுபிறப்பித்திருக்கிறார்**

வேட்பாளர்களைத் தனிப்பட்ட முறையில் இழிவுபடுத்தியும் அவர்களது கௌரவத்திற்குப் பங்கம் விளைவிக்கும் முறையிலும் துண்டுப் பிரசுரங்கள் வடபகுதியில் சில இடங்களில் விநியோகிக்கப்படுவதாகவும் ஆபாசப் பிரசுரங்கள் வெளி... பெயர் இல்லாதிருப்பதாகவும் வேறு சில துண்டுப்பிரசுரங்களில் வெளியிட்டவர் அச்சிட்டவர் பெயர்கள் தவறாகக்கொடுக்கப்பட்டிருப்பதாகவும் தகவல் கிடைத்ததைத் தொடர்ந்து சில அச்சுக்கூடங்களையும் வேட்பாளர் சிலரின் தீவிர ஆதர... தீவிர விசாரணை செய்யுவிருக்கின்றனர்

### இ-போ-ச பஸ்களில்

இலங்கைப் போக்குவரத சபை பஸ்களில் சிலர் தேர்...

## "இலாபத்திற் பங்கை தொழிலாளருக்குக் கொடுங்கள்!"
### மேதினவிழாவில் சைவஅறிஞர் வேண்டுகோள்

சுழிபுரம், சனி
"கூட்டுறவு இயக்கத்தில் தொழிலாளி, முதலாளி பேதத்துக்குஇடமில்லை இயக்கத்தை நிர்வகிப்பவர்கள் யாவரும் உண்மைச் சேவையாளர்களே. தாம் தமக்காக நடாத்தும்இயக்கத்தில் பணியாற்றும் தொழிலாளர்களை பழிவாங்கும் திட்டங்களைக் கொள்ளவேண்டிய அவசியம் இல்லை. தொழிலாளர்கள் சங்கங்களின் கருமத்தில் கண்ணாய்இருந்துகருமங்களை திறமையுடன் நடைபெற நிர்வாகிகள் வழிவகுகக வேண்டும். யாவரும் நிர்வாகத்தில் உண்மையோடு உழைப்பார்களானால் கூட்டுறவுத் திட்டம் சிறந்த பயனைக் கொடுக்கும். லாபத்தின் ஒரு பகுதியை தொழிலாளர்களுக்கு கொடுக்க வேண்டும் அப்போது தான் உழைப்பின் பயனைப்பெற முடியும்"

இவ்வாறு சங்கானை அரசடி வயிரவ கோவில் முன்றலில் நடைபெற்ற வலி. மேற்கு கூட்டுறவு பணியாளர் மேதினவிழாவில் உரையாற்றிய பண்டத்தரிப்பு பல நோக்கு கூட்டுறவு சமாஜத் தலைவர் எம் வைரமுத்து குறிப்பிட்டார்

கூட்டத்துக்கு சங்கானை முன்னாள் பட்டினசபைத் தலைவர் திரு எஸ் கே திருச்சிற்றம்பலம் தலைமை வகித்தார் மங்கள இசையுடன் விழா ஆரம்பமானது பரிஸ்டர் வி காராளசிங்கம் பேசுகையில், செங்கொடியின்கீழ் ஒன்றுபட்டு இலங்கையின் முன்னேற்றத்துக்காக உழைக்கவேண்டும் தென் இலங்கையிலுள்ள வகுப்புவாத சக்திகளுக்கு சாவுமணியடிக்க வடபகுதியில் இருந்து செங்கொடியின்கீழ் ஒன்று படும் முற்போக்காளர்களை ஆட்சிமன்றம் அனுப்பிவைக்கவேண்டும். மற்றும் பலர் பேசினர் கலைநிகழ்ச்சிகள் நடைபெற்றன

## இன்று இசைப்பட்டதாரிகள் கூட்டம்

யாழ்ப்பாணம், திங்கள்
அகில இலங்கை வேலையற்ற இசைப்பட்டதாரிகள் சங்கக் கூட்டம் இன்று காலை 9 மணியளவில் நல்லூர் மங்கையர்க்கரசி வித்தியாலயத்தில் நடைபெறவிருக்கிறது. இந்தியப் பல்கலைக்கழகங்களில் இசை பயின்று இந்நாட்டில் வேலையற்றிருக்கும் இசைப்பட்டதாரிகளின் நியமனம் தொடர்பாக சங்கம் மேற்கொள்ளவேண்டிய நடவடிக்கைகள் பற்றி இக்கூட்டத்தில் ஆராயப்படவிருக்கிறது.

## "தமிழரின் இன்னல்களை உலகுக்கு விளக்குவேன்"

தாவடி, ஞாயிறு
"தமிழ் மக்கள் எப்படிப்பட்ட தாக்குதல்களினால் நசுக்கப்பட்டு ஒதுக்கப்பட்டு வாழ்ந்து வருகின்றார்கள்என்பதை உலக நாடுகளுக்கு எடுத்துக்காட்ட விரும்பியே ஆட்சி மன்றம் செல்லவிரும்புகின்றேன். ஆட்சி மன்ற மூலமாகவோ அல்லது ஒற்றையாட்சியின்மூலமோ தமிழர் தங்கள் சகலஉரிமைகளையும் பெற்றுவிட முடியாது. சுயாட்சிமூலமே தமிழர் சுபீட்சமாகவாழலாம்".

இவ்வாறு கொக்குவில் மேற்கு வேம்படி முருகன் ஆலயத்திற்கு அண்மையில் நடைபெற்ற பிரசாரக்கூட்டத்தில்பேசுகையில், நல்லூர்த்தொகுதி தமிழர்சுயாட்சிக் கழக வேட்பாளர் திரு. அம்பலவாணர் இரத்தினம் கூறினார்.

திரு. ம. சிவபுண்ணியத்தின் தலைமையில்நடைபெற்ற இக்கூட்டத்தில், அவர் மேலும் பேசுகையில் கூறியதாவது;-
"காங்கேசன்துறையில் இன்னுமொரு சீமெந்துத் தொழிற்சாலையை அமைக்கக்...

## நெல் உற்பத்தி 3 பங்குகளால் அதிகரிப்பு

கோட்டை, ஞாயிறு
கடந்த வருடங்களை விட இம்முறை நெல் உற்பத்தி 3 பங்கு அதிகரித்துள்ளது. விவசாய இலாகா வெளி... துள்ளது. 1963—64-ம் ஆண்டுகளில் 4·7 என்ற விகிதம் தற்போது வருடத்துக்கு 2·9 என்ற விகிதத்தால் கூடியுள்ளது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எடுக்கப்படுமென இவர்களுக்கு அறிவிக்கப்பட்டுள்ளது.

சங்கத்தின்பற்றுவரவுகளை பரிசீலனை செய்ய குழேப்பாளராக திரு. பீ. சண்முகரத்தினம் நியமிக்கப்பட்டுள்ளார்

மதூர் கூறினார்.

இந்தக் கிராமங்களில் கடந்த ஏழு ஆண்டுகளாக ஒரு சொட்டு மழைகூட பெய்யவில்லையென அவர் மேலும் சொன்னார்.

பட்ட முறையில் இழிவுபடுத்தியும் அவர்களது கௌரவத்திற்குப் பங்கம் விளைவிக்கும் முறையிலும் துண்டுப் பிரசுரங்கள் வடபகுதியில் சில இடங்களில் விநியோகிக்கப்படுவதாகவும் ஆபாசப் பிரசுரங்கள் வெளியிடப்பட்டுள்ளதாகவும் பொலிசாருக்குப் புகார்கள் கிடைத்துள்ளன. சில துண்டுப் பிரசுரங்களில் அச்சிட்டவர் பெயர், வெளியிட்டவர்

யும் வேறு சில துண்டுப்பிரசுரங்களில் வெளியிட்டவர் அச்சிட்டவர் பெயர்கள் தவறாகக்கொடுக்கப்பட்டிருப்பதாகவும் தகவல் கிடைத்ததைத் தொடர்ந்து சில அச்சுக்கூடங்களையும் வேட்பாளர் சிலரின் தீவிர ஆதரவாளரின் இல்லங்களையும் திடீர் சோதனையிடுவதற்குப் பொலிசார் திட்டமிட்டுள்ளனராம். அச்சக அதிபர்கள் சிலரையும் பொலிசார்

## ஐந்து நாட்களாக எக்ஸ்போ-70

# கோபுரத்தின் உச்சியில் இருந்தவன் இறங்கினான்!

டோக்கியோ, மே 3

எக்ஸ்போ-70 உலகப் பொருட்காட்சி அரங்கிலுள்ள கோபுரத்தின் உச்சியில் கடந்த 5 நாட்களுக்கு மேலாக உட்கார்ந்து கொண்டிருந்தவனை இன்று கடைசியாக கீழே இறங்கி வந்தபோது பொலிஸார் அவனைத் தமது விருந்தினராக்கிக் கொண்டனர்.

ஐப்பானிலுள்ள ஒட்டாவாவில் கடக்கும் எக்ஸ்போ-70 உலகப் பொருட்காட்சியை உடனடியாக நிறுத்த வேண்டுமென்று கோரியே இவன் கோபுரத்தின் உச்சியில் ஏறி உட்கார்ந்து கொண்டு சத்தியாக்கிரகம் செய்தானாம்.

இறக்குவதற்கு யாராவது முயற்சி செய்தால், கீழே குதித்துத் தற்கொலைசெய்து கொண்டுவிடப் போவதாகப் பயமுறுத்தினானாம்.

159 மணி நேரம் இவன் அந்த 70 கிலோ மீட்டர் உயரமுள்ள உச்சியில் அமர்ந்திருந்தானாம்.

## வீதி மரங்கள் இடையூறு

யாழ்ப்பாணம், திங்கள்

'வீதி மரங்களும் வேலமரங்களும் வடபிரதேசத்தில் ஓடுகின்ற இரட்டைத்தட்டு பஸ்வண்டிகளுக்கு இடைஞ்சலாகவும், அபாயத்தையுண்டாக்கக்கூடியனவாகவும் உள்ளன.'

வடமாகாண பஸ்சாரதிகள் சங்கம் வடபிராந்திய இ. போ. ச. அதிகாரிகளுக்கு அனுப்பியுள்ள மகஜர் ஒன்றில் இவ்வாறு குறிப்பிட்டுள்ளனர்.

மழைக்காலங்களிலும் புயல் வீசும் வேளையில் இரட்டைத்தட்டு வண்டிகளைச் செலுத்துவதில் சிரமம் ஏற்படுகின்றதென்றும் அம்மகஜரில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

## "ஈழநாடு" பாலைதீவு கஷ்டநிவாரண நிதி விநியோகம்

யாழ்ப்பாணம், திங்கள்

'ஈழநாடு' பாலைதீவு கஷ்டநிவாரண நிதிக் குழுவினர் யாழ்ப்பாணக்கச்சேரியில் அரசாங்க அதிபர் பீட்டர்ஸின் தலைமையில் கூடினர். சமூக சேவை பகுதி அதிகாரி திரு. செ. நிர்க்குணநந்தன், வணபிதா மதுரநாயகம், பொலிஸ் அதிபர் சுந்தரலிங்கம், திரு. கே. பி. ஹரன் (ஈழநாடு) இவர்கள்கூடி மேற்குறித்த நிதியில் சேர்ந்துள்ள ரூ. 11 ஆயிரத்து 275ஐயும் இவ்விபத்தால் பரிதவிக்கும்குடும்பங்களுக்கு எவ்விதம் விநியோகம் செய்வதென்பதைப் பற்றி ஆலோசித்தனர்.

உடல்நலமின்மையால் டாக்டர் கனகரத்தினம் இக்கூட்டத்துக்கு வரமுடியவில்லை, சமூக சேவைப் பகுதியினர் இதுபற்றி விசாரித்து, அவசர உதவி தேவைப்பட்ட பல குடும்பத்தினரைப் பற்றிய விவரங்களடங்கிய இடாப்பு தயாரித்துள்ளனர்.

அதன்படி உடன் உதவி தேவைப்பட்ட குடும்பங்களுக்கு மாதம் ரூ. 30 வீதம் இந்த நிதியிலிருந்து அளிப்பதென்றும், மற்றும் சிலகுடும்பத்தாருக்கு ஈமச் செலவுகளுக்காக ரூபா 100 அளிப்பதென்றும் தீர்மானிக்கப்பட்டது.

நேற்று 'ஈழநாடு' ஆசிரியர் கே. பி. ஹரன், சமூகசேவை இலாகா அதிகாரிகளான திரு நிர்க்குணநந்தன் அ. கநாகராசா இவர்கள் நேரில் சென்று சில குடும்பத்தாருக்கு உதவிநிதியை அளித்தனர். இந்தநிதி விநியோகம் தொடர்ந்து நடைபெறும்.

## இ-போ-ச பஸ்களில்

இலங்கைப் போக்குவரத்துச் சபை பஸ்களில் சிலர் தேர்தல் பிரசாரத்துக்கென்றே பிரயாணம் செய்வதாகவும் இவர்களால் பஸ்களில் அமைதியாகப் பிரயாணம் செய்ய முடியாதிருப்பதாக பிரயாணிகள் சிலர் புகார் தெரிவித்திருப்பதாகவும் தங்களுடைய அலுவல்களையும் சரியாகக் கவனிக்கமுடியாதிருப்பதாகச் சில பஸ் ஊழியர்களும் புகார் தெரிவித்துள்ளனர், பஸ்களில் மதுபோதையில்தேவையற்ற

(4-ம்பககம்பார்க்க]

சுன்னாகம் ப. ச.

## போயா கருத்தரங்கு

மல்லாகம், ஞாயிறு

சுன்னாகம் பட்டினசபை ஆராய்வுக்குழுக் கருத்தரங்கில் இம்மாதம் 5-ம் திகதி மாலை திரு. என். சிவநேசன் 'தமிழ் மக்களின் இன்றைய நிலையும் எதிர்காலமும்' என்னும் பொருள் பற்றி உரை நிகழ்த்துவார்.

## பங்குகளால் அதிகரிப்பு

கோட்டை, ஞாயிறு

கடந்த வருடங்களைவிட இம்முறை நெல் உற்பத்தி 3 பங்கு அதிகரித்துள்ளது. விவசாய இலாகா வெளியிட்டுள்ள அறிக்கை ஒன்றில் இத்தகவல் வெளியிடப்பட்டுள்ளது.

1964—1969-ம் ஆண்டுகளிலும் பார்க்க தற்போது ஏக்கருக்கு 3 பங்கு விளைந்துள்ளது. 1963—64-ம் ஆண்டுகளில் 4·7 என்ற விகிதம் தற்போது வருடத்துக்கு 2·9 என்ற விகிதத்தால் கூடியுள்ளது.

அரசாங்கத்தின் அதிக உணவு பயிரிடுதல் திட்டத்தின்கீழ் கடன்வசதியளித்து விவசாயிகளை ஊக்குவித்ததன் மூலம் இந்த அதிகரிப்பு பெறப்பட்டதாக அரசாங்கம் தெரிவித்துள்ளது.

திரு. ம. சிவபுண்ணியத்தின் தலைமையில் நடைபெற்ற இக் கூட்டத்தில், அவர் மேலும் பேசுகையில் கூறியதாவது:-

"காங்கேசன்துறையில இன்னுமொரு சீமெந்துத் தொழிற்சாலையை அமைக்கக் கூடிய வாய்ப்புக்கள் இருந்தும் ஏன் அமைக்க முன்வரவில்லை? தமிழர்கள் வாழ்கின்றபிரதேசத்தில்அமைத்தால் தமிழ் மக்கள் வேலைவாய்ப்பைப்பெற்று முன்னேறி விடுவார்கள் என்பதற்காகவே இங்கு அமைக்கப்படவில்லை. 1957-ம் ஆண்டில் உலகவங்கி தனது அறிக்கையில் இலங்கையில் சுமார் 10க்கு மேற்பட்ட சீமெந்துத்தொழிற்சாலைகளை அமைக்க கூடிய வசதிகள் இருப்பதாகக் கூறியுள்ளது. ஆனால் இத் திட்டம் இங்கு செயல் படுத்தப்படவில்லை"

"புல்மோட்டைப் பகுதியிலே 'இல்மனைட்' வேண்டியளவுபெறவசதியுண்டு. பூநகரிப் பகுதியிலே பெற்றோலியம்பெறவாய்ப்புகள்உண்டு. இவ்விடங்களியெல்லாம்ஏன் தொழிற்சாலைகளை ஆரம்பிக்கக் கூடாது? இவை தமிழர்கள் வாழ்கின்ற பிரதேசம் என்பதால் தான் ஆரம்பிக்கப்படவில்லை. தமிழருடைய முன்னேற்றத்துக்குஎன்றுமே தடையாக இருக்கும் ஒற்றையாட்சி".

பொருளாதாரம் அரசியலின் ஆணிவேர். பொருளாதாரத்தில் முன்னேற்றம் அடைந்து சுயாட்சிபெற்றால் தான் தமிழ் மக்கள் சுபிட்சமாக வாழமுடியும் என்றார்.

இக்கூட்டத்தில் திரு. ச. க. முருகையா, திரு. ப. ஸ்ரீபதி திரு. கா. லோகேந்திரன் உட்படப்பலர் உரையாற்றினர்

"தேர்தல் முடிந்ததும்!

## உடுப்பிட்டியில் தொ. நு. கல்லூரி நிறுவுவது என் முதல் வேலை"

— சிவசிதம்பரம்

உடுப்பிட்டி, ஞாயிறு

"வடபகுதியில் ஒரேயொரு கனிஷ்ட தொழில் நுட்பக் கல்லூரியே இருக்கின்றது. இக்கல்லூரி மூலம் எல்லோரும் தொழிற்கல்வி பெற்றுக்கொள்வதற்கு இயலாது. எனது தொகுதி மாணவர்கள் தொழில் நுட்பக் கல்வியில் அதிக ஆர்வம் காட்டி வருகின்றனர்.

ஆதலினால் தேர்தல் முடிந்ததும் உடுப்பிட்டித் தொகுதியில் ஒருகனிஷ்ட தொழில் நுட்பக் கல்லூரி நிறுவுவது எனது முக்கிய கடமைகளில் ஒன்றாக இருக்கும்."

இவ்வாறு முன்னாள் ஆட்சி மன்ற உபசபாநாயகரும், உடுப்பிட்டி காங்கிரஸ் அபேட்சகருமான திரு. எம். சிவசிதம்பரம் அல்வாய் தெற்கில் தமிழ் காங்கிரஸ் வாலிபமுன்னணியைத் திறந்து வைத்துப் பேசுகையில் கூறினார்.

திரு. மு. சண்முகம் ஜே. பி. தலைமையில்நடைபெற்ற இக் கூட்டத்தில் திரு. சிவசிதம்பரம் தொடர்ந்து பேசுகையில் இழந்த உரிமைகளை மீட்டுத் தருவதற்காகப் புறப்பட்ட தமிழரசுக் கட்சியினர், தமது கொள்கைகள் என்னவென்றே தெரியாது அடிக்கடி சவால்கள்விடுவதிலேயே நேரத்தைச் செலவிடுகின்றனர். சவால்கள் மூலம் நமது இழந்த உரிமைகளை மீட்டுவிடமுடியாது என்பதை அவர்கள் நன்குணர வேண்டும்" என்று குறிப்பிட்டார்.

திருவாளர்கள் அ. ஞானச்சந்திரன், எஸ். விநயகமூர்த்தி, எஸ். கிருஷ்ண பிள்ளை. இ. இராமச்சந்திரன், எஸ், ஈஸ்வரமோகன் ஆகியோரும் பேசினர்.

# தமிழின் தொன்மையே கவர்ந்தது

## யாழ். இலக்கியவட்டக் கூட்டத்தில் செக். அறிஞர்

யாழ்ப்பாணம், திங்கள்

"தமிழ் மொழியை எனக்குப் பிடித்ததற்குக் காரணம் அதன்தொன்மையே. அன்று தொட்டு இன்றுவரை தமிழ் அதன் தொன்மையை மறவாது கலாசாரத்தைப் பேணி வந்திருக்கின்றது. முன்னாட்கள் கீழைத் தேசமொழிகளில் சமக்கிருதத்தையே மேற்கு நாட்டவர்கள் அறிந்து கற்று வந்தனர். இன்று தமிழ் மொழியின் தொன்மையை அறிந்தமையால் உலக நாடுகளில் பல பல்கலைக் கழகங்களில் இடம் பெற்றுள்ளது. தமிழின் தனித்துவத்தையும் தொன்மையையும் அறியாது புறக்கணித்து வந்தமை குறித்து இப்போது கவலை தெரிவிக்கின்றனர்"

இவ்வாறு செக்கோஸ்லோவாக்கிய அறிஞர் திரு ஜோன் பிலிப்ஸ்கி நேற்று மாலை யாழ்ப்பாண இலக்கிய வட்ட உறுப்பினர்கள் முன் உரையாடும்போது தெரிவித்தார்.

இந்த நிகழ்ச்சிக்கு இலக்கிய வட்ட வலைவ திரு. செங்கை ஆழியான் தலைமை தாங்கினார்.

திரு. பிலிப்ஸ்கி தொடர்ந்து போசுகையில் ஈழத்து இலக்கிய சிருட்டியாளர்களிடம் புதிய போக்கையும் தனித்துவத்தையும் காண்கின்றேன். பழைய இலங்கியங்களை புதுமுறையில் ஆக்கத் தேவையில் அவற்றை அப்படியே நாம் படித்துக் கொள்ளலாம். அப்படி ஆக்குகின்றவர்கள் கம்பன் வழியை மேற்கொள்ள வேண்டும். வான்மீகியின் இராமாயாணத்தை கம்பன் தமிழ்ப் படுத்தும் போது தமிழ்க் கலாசாரத்துக்கு ஒப்ப மனித தத்துவத்தைப் பாத்திரங்கள் மூலம் காட்டியுள்ளான் என்றார்'

இந் நிகழ்ச்சியில் கவிஞர் கந்தவனம் வரவேற்புரை நிகழ்த்தினார்.

திரு செங்கையாழியான் கூட்டத்திற்கு வந்திருந்த எழுத்தாளர்களை திரு பிலிப்ஸிக்கு அறிமுகஞ்செய்து வைத்தார், உரையாடலின் போது கேள்விகளுக்கு திரு பிலிப்ஸ்கி விடை கூறினார். செக்ஸ் மொழியில் மொழி பெயர்க்கப்பட்ட தண்ணீரும் கண்ணீரும் ஆசிரியர் திரு டொமினிக் ஜீவாவை தலைவர் திரு செங்கையாழியான் அறிமுகப்படுத்தி வைத்தார்.

திரு டொமினிக் ஜீவா உரையாடும்போது ஈழத்துப் படைப்பாளிகளின் நல்ல நூல்களையெல்லாம் செக்ஸ் மொழியில் மொழிபெயர்க்க வேண்டும் என்று கேட்டுக் கொண்டார்,

## "திறமைக்கே எனது காலத்தில் முதலிடம்"

கொடிகாமம், ஞாயிறு

'கெற்பேலி-விடத்தல்பளை போன்ற போக்குவரத்து வசதியற்ற கிராமங்களுக்கு ஓர் உப தபாற் கந்தோர் இல்லாதது பெரும் குறையாகும். விடத்தல்பளையில் ஓர் உப தபாற் கந்தோர் நிறுவ தபால் இலாகா எடுத்த முயற்சி அரசியல் காரணங்களுக்காகத் தடைப்பட்டுவிட்டது'

விடத்தல்பளையில் நேற்று நடந்த தமிழ்க்காங்கிரஸ் தேர்தல் பிரசாரக் கூட்டத்தில் முன்னாள் சாவகச்சேரி எம் பி திரு. வி குமாரசாமி பேசும்போது மேற்கண்டவாறு கூறினார்.

திரு. கே சின்னப்பு தலைமையில் நடந்த இக்கூட்டத்தில் திரு. குமாரசாமி மேலும் கூறியதாவது:-

கடந்த 14 வருடங்களாக இவ்விரு கிராமங்களும் முன்னேற்றமடையவில்லை. நான் ஆட்சிமன்ற உறுப்பினராக இருந்தபோதுபோடப்பட்ட றோட்டு இன்றும் அரைகுறையாகவே இருக்கிறது. அந்த றோட்டைப் பூர்த்தி செய்வதற்கு கடந்த 14 வருடங்களாகக் எவ்வித முயற்சியும் எடுக்கப்படவில்லை?

இப்பகுதி மக்கள் தபால் தந்தி தொடர்பில்லாமல் பெரும் கஷ்டப்படுகிறார்கள் நான் ஆட்சிமன்ற உறுப்பினராகவிருந்த காலத்தில் பாகுபாடு காட்டவில்லை. திறமைசாலிகளுக்கே முதலிடம் கிடைத்தது என்பதை யாவரும் அறிவார்கள்.

கச்சாய் கிராமசபை முன்னாள் உப தலைவர் திரு. ஆ. கனகரத்தினம் பேசும்போது இம்முறை தமிழ்க்காங்கிரஸ் உறுப்பினர்களை அனுப்பினால்தான் கிராமங்கள் அபிவிருத்தியடையும் என்று கூறினார்

திரு. கே. குலேந்திரராஜா பேசும் போது, திருக்கோணமலையில் ஆர். ஜி. சேனநாயகாவுக்கு காணி கொடுக்கும்போது தமிழரசார் எதிர்க்காமல் இருந்துவிட்டு சிங்களக் குடியேற்றத்திற்கு தமிழ்க்காங்கிரஸ் தலைவர்தான் காரணமென்று கூறுவது வேடிக்கையாக இருக்கிறது என்றார்

திருவாளர்கள் எஸ் பி மயில்வாகனன், கே ராஜகுலேந்திரன், எஸ் மார்க்கண்டு, கு கமலதாசன் ஆகியோரும் பேசினர்.

## முன்னாள் இலங்கை பர்மிய தூதுவர்

# பூன்வார்ட் விடுதலை!

ரங்கூன், மே. 3

தமது மனைவியைக் கவனக்குறைவால் கொலை செய்ததாக குற்றஞ்சாட்டி நான்காண்டு சிறைத்தண்டனை விதிக்கப்பட்டிருந்த முன்னாள் இலங்கை பர்மியத் தூதுவர் திரு பூன்வார்ட்டுக்கு ரங்கூன் அப்பீல் நீதிமன்றம் இன்று விடுதலை செய்து தீர்ப்பளித்தது,

1967-ம் ஆண்டு அக்டோபர் மாதம் கொழும்பிலுள்ள பர்மியத் தூதரக வீட்டில் தமது மனைவி திருமதி ஷேர்லி பூன்வார்டடை கவனக் குறைவால் கொலை செய்ததாக ரங்கூன் நீதிமன்றத்தில் குற்றஞ்சாட்டி தொடரப்பட்ட வழக்கில் நான்காண்டு சிறைத்தண்டனை விதிக்கப்பட்டிருந்தது.

அப்பீல் விசாரணை செய்த ரங்கூன் நீதிமன்றம் ஏற்கனவே இவர் அனுபவித்த தண்டனையும், பதவி இழப்பும் இவருக்குப் போதுமான தண்டனையென்று தெரிவித்து விடுதலை செய்தது.

## யாருடையது?

யாழ்ப்பாணம், திங்கள்

யாழ்ப்பாணப் பொலிஸ் குற்றப்பிரிவினர் சைக்கிள் ஒன்றை தமது பாதுகாப்பில் வைத்துள்ளனர். அச்சைக்கிலுக்கு உரியவர்கள் தகுந்த ஆதாரத்துடன் சென்று பெற்றுக்கொள்ளலாம் எனத் தெரிவிக்கின்றனர்.

பறுளை சுப்பிரமணியர்

## கொடியேற்ற 10-ம் திகதியே நடைபெறும்

சுழிபுரம், திங்கள்

பஞ்சாங்கம் கலண்டர் ஆகியவற்றில் குறிப்பிட்டபடி சுழிபுரம் பறுளை சுப்பிரமணியர்கோவில் கொடியேற்றம் இம்மாதம் 9-ம் திகதி (தமிழ் சித்திரை 29ந்திகதி) நடைபெறாது மறுதினமாகிய 10-ந் திகதி திருவிழா கொடியேற்ற வைபவத்துடன் ஆரம்பமாகி 21-ந் திகதி திருவடிநிலையில் நடைபெறும் தீர்த்தோற்சவத்துடன் நிறைவுறும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## இரணைதீவு கட்டளைக்குரவர்

பண்டத்தரிப்பு, ஞாயிறு யாழ் மேற்றிராசனத்தின் பலபங்குகளிலும் இறுதியாக இரணைதீவு மீசாமிலும் கட்டளைக்குரவராகத் தொண்டாற்றிய வண. ஹென்றி மொறேசுவாமியார் இம்மாதம் தமது தாயகம் செல்லுகிறார். இரணைதீவின் முன்னேற்றத்துக்கு காரணமாயிருந்த இக்குரவருக்கு இரணைதீவுமக்களால் பிரியாவிடை அளிக்கப்பட்டது.

இரணைதீவு புதிய கட்டளைக்குரவராக வண. தேவராசன் நியமனம் பெற்றுள்ளார்.

— —

## டெடிகமவில் 15-வது ஜாதிகசம்பத சிட்டிழுப்பு

கோட்டை, ஞாயிறு 15-வது ஜாதிகசம்பத சிட்டிழுப்பு இம்மாதம் 22ம் திகதி டெடிகமவில் நடைபெறும்.


## வரி விளம்பரம்

### விற்பனைக்கு

சொந்தப் பாவிப்பில் உள்ள 25 ஸ்ரீ மூவாயிரம் தொடர் இலக்கமுள்ள மர்சி பேர்கூசன் 135 விற்பனைக்குண்டு. விபரங்களுக்கு திரு. அ. குணரத்தினம், அல்லின் வீதி, காரைநகர். 2095

சுன்னுகம் மின்சாரநிலையத்திலிருந்து ஊரெழுவுக்கு போகும் பாதையில் 12 பரப்பு தோட்டக்காணி விற்பனைக்கு உண்டு. தொடர்பு கொள்ளவும். ஆ. அருமைநாயகம் ஆயுள்வேதவைத்தியர், சுன்னுகம். 2097

### வாடகைக்கு

பகுதி வீடு:


சமயலறை, குளியலறை, மலசலகூடம், கராஜ் ஆகியவற்றோடு கூடிய 3 அறைகளைக் கொண்ட இளம் தம்பதிகளுக்கு வசதியான ஒரு பகுதிவீடு யாழ்ப்பாணத்தில் நியாயமான வாடகைக்கு விடப்படும். டாக்டர்கள் அல்லது ஆசிரியர்கள் விரும்பப்படத்தக்கவர்கள். பெரிய பாடசாலை, வைத்தியசாலை, கடைகள் ஆகியவற்றிற்கும் யாழ். கச்சேரிக்கும் அண்மையில் உள்ளது. விண்ணப்பிக்கவும். விளம்பர இல. 2094, C/o 'ஈழநாடு', யாழ்ப்பாணம். 2094

கடை:

கன்னதிட்டி றேட் 70-ம்


# வேட்பாளர் அறிமுகம்

## வட்டுக்கோட்டை தொகுதி



திரு. அ. அமிர்தலிங்கம்
(தமிழரசுக்கட்சி வேட்பாளர்)

மாணவப் பராயததிலிருந்தே அரசியலில் ஈடுபாடுடைய திரு. அ. அமிர்தலிங்கம் 1952-ம் ஆண்டு முதல் பொதுத்தேர்தலில் தமிழரசுக்கட்சியின் அபேட்சகராகப்போட்டியிட ஆரம்பித்தார். 1952ல் நடைபெற்ற தேர்தலில் தோல்வியுற்ற அவர், மீண்டும் 1956-ல் நடைபெற்ற தேர்தலில் போட்டியிட்டு வெற்றி பெற்று தமிழரசுக்கட்சியின் பிரதிநிதியாக ஆட்சிமன்றம் சென்றார். தமது 28-வது வயதில் முதன் முதலாக ஆட்சிமன்றப் பிரதிநிதியாகத் தெரிவுசெய்யப்பட்ட திரு. அமிர்தலிங்கம், வடக்கிலிருந்து சென்ற வயதிற் குறைந்த எம். பி. என்ற பெருமையையும் அக்காலத்தில் தட்டிக்கொண்டவர்.

பண்ணுகம் மெய்கண்டான் வித்தியாசாலையில் ஆரம்பக் கல்வியை ஆரம்பித்து. சுழிபுரம் விக்ரோறியாக்கல்லூரியிலிருந்து முதன் முதலாக இலங்கைப் பல்கலைக் கழகத்திற்கு தேர்ந்தெடுக்கப்பட்ட இவர். 1949-ல் நியாயதுரந்தரர் ஆனார்.

1949-ம் ஆண்டு தமிழ்க் காங்கிரஸ் கட்சியிலிருந்து விலகி, தமிழரசுக்கட்சி ஸதாபித்ததிலிருந்து திரு. அமிர்தலிங்கம் அதில் முககிய பங்கெடுத்துவருகிறார். 1964-ம் ஆண்டிலிருந்து கட்சியின் பொதுச் செயலாளராகவிருந்துவரும் இவர் தமிழரசுக் கட்சியால் நடாத்தப்பட்ட ஸ்ரீஎதிர்ப்பியக்கம், சத்தியாக்கிரகம் ஆகியவற்றில் பங்குபற்றிப் பல முறை தடுப்புக்காவற் சிறையில் வைக்கப்பட்டவர். சத்தியாக்கிரகத்தில் தமது அருமைமனைவி திருமதி மங்கை

வரும் திரு. அமிர்தலிங்கம், கடந்த 14 ஆண்டுகளாகத் தொடர்ந்து வட்டுக்கோட்டையின் ஆட்சிமன்றப்பிரதிநிதியாகயிருந்த பெருமையைத்தட்டிக்கொண்டு, மீண்டும் இம்முறையும் மொதுத் தேர்தலில் குதித்துள்ளார்.

0 0 0

திரு. ஆ. தியாகராசா
(தமிழ்க் காங்கிரஸ் அபேட்சகர்)



தமிழ்க்காங்கிரஸ் கட்சியின் அபேட்சகராகப் போட்டியிடும் திரு. ஆ. தியாகராசா, தாம் வட்டுக்கோட்டை ஆட்சிமன்றப் பிரதிநிதியாக இம்முறை தேர்ந்தெடுக்கப்பட்டால் வட்டுக்கோட்டைத்தொகுதியில் நிலவிவரும் வேலையில்லாத் திண்டாட்டத்தைப் போக்க கைத்தொழிற்பேட்டைகளை நிறுவ முயற்சியெடுப்பாரென உறுதி கூறுகிறார்.

காரைநகரைச் சேர்ந்த இவர் காரைநகர் இந்துக்கல்லூரியின் அதிபராகக் கடந்த 25 வருடங்களாகச் சேவையாற்றித் தமது 54 வது வயதிலேயே அப்பதவியை ராஜிஞமாசெய்துவிட்டு அரசியலில் ஈடுபட்டுள்ளார். தமிழ்மக்களின் நலன்கருதி, அவர்களின் உரிமைகளுக்காகப் போராடுவதற்கும், வேலையில்லாத் திண்டாட்டத்தைப் போக்குவதற்குமாகவே தமது 6 வருடகால அதிபர் பதவியையும் பொருட்படுத்தாமல் உதறித்தள்ளிவிட்டுத் தேர்தலில் இறங்கியுள்ளதாக அவர் கூறுகிறார்.

டம்பெற்றுர்: பொருளியலில் ஒரு சிறந்த நூலையும் வெளியிட்டுள்ள திரு. தியாகராசா ஊர்காவற்றுறைத் தொகுதியில் முன்பும் ஒருதடவை அபேட்சகராக நின்று தோற்றவர்.

ஆசிரியர்களின உரிமைகளுக்காகப் போராடிய ஒரேயொரு தமிழ்க்கட்சி தமிழ்க் காங்கிரஸ் என்பதற்காக, தமது ஆசிரியப் பதவியையும் ராஜிஞமாசெய்துவிட்டு, ஆசிரியர்களின் கஷ்டங்களை அறவே போக்குவதற்காகத் தேர்தலில் போட்டியிட முன்வந்துள்ளதாக அவர் கூறிக்கொள்கிறார்.

0 0

## பருத்தித்துறைதொகுதி

திரு. க. துரைரத்தினம்
(தமிழரசுக்கட்சி)

இலங்கைத் தமிழரசுக் கட்சியின வேட்பாளரான திரு. துரைரத்தினம் வல்வெட்டித்துறையையே பிறப்பிடமாகக்கொண்டவர். சர்வகலாசாலை கல்வியை முடித்து அவர் வெளியேறியபோது 1952ம் ஆண்டுத் தேர்தல் நடைபெற்றுக் கொண்டிருந்தது. அப்போது மொழியுணர்ச்சியும் பற்றும்மிக்க இவர் தமிழரசுக் கட்சியின் சாதாரண ஊழியஞக புகுந்து அதனை மிகவும் கட்டிவளர்த்தவர்களுள் ஒருவராக விளங்கிருர்.



1956-ம் ஆண்டுதான் இவர் முதன் முதலில் அரசியலில் குதித்தார். அப்போது இவர் மிகவும் வயதிற் குறைந்த இளம் அபேட்சகராகவிளங்கினர். அக்காலத்தில் பருத்தித்துறைத் தொகுதி வடமராட்சியின் பெரும்பகுதியை உள்ளடக்கியிருந்தது. அத்தேர்தலில் துரைரத்தினம் தோல்வியுற்றுர்.

1960-ம் ஆண்டில் பருத்தித்துறைத் தொகுதியெனப் பிரிந்தபோது பருத்தித்துறைத் தொகுதிக்கு 1960ம் ஆண்டு மார்ச் மாதம் நடைபெற்ற தேர்தலில் போட்டியிட்டு வெற்றிகொண்டார். அப்போது இவருடன் ஐவர் போட்டியிட்டனர். 1960ம் ஆண்டு ஜூலையில் திரு. நடராசாவுக்கும் இவருக்கும் நேரடிப்போட்டி நடை

ஹாட்லி கல்லூரியில் பெற்றுக்கொண்ட பின் சட்டக் கல்லூரியில் பயின்று 1936ம் ஆண்டு நியாயவாதியானுர் பருத்தித்துறை பட்டின சபை அந்தஸ்துப் பெற்றதும் முதன்முதலாக திரு. நடராசாவே அதன் தலைவரானுர்.

அகில இலங்கைத் தமிழ் காங்கிரஸ் கட்சியில் பற்றுமிக்க இவர், திரு. ஜி. ஜி. பொன்னம்பலம் அவர்களின் வழியிலேயே அரசியல் வாழ்க்கையை அமைத்துக் கொண்டார். அகில இலங்கைத் தமிழ் காங்கிரஸ் ஸ்தாபக அங்கத்தவராகவும் இவர் விளங்குகிருர். ஊர் மக்கள்மீது அபிமானமும், சமூகத் தொண்டுகளில் ஈடுபாடும்கொண்டவர் திரு. நடராசா.

இவர் பருத்தித்துறைப் பட்டினசபைத் தலைவராக விளங்கிய காலத்தில் ஊர் மக்களின் வசதிகளை மிகவும் அக்கறையுடன் கண்காணித்துச் செயலாக்கம் புரிந்துள்ளார். கரையோரப் பகுதி மக்களின் குடிநீர்ப் பிரச்னை தீருவதற்கு குடிநீர் விநியோகத்திட்டத்தை வெற்றிகரமாகச் செயற்படுத்தியுள்ளார்.

பருத்தித்துறைப் பட்டின சபை மலகூடத் தொழிலாளர்களுக்கான வீடமைப்புத் திட்டத்துக்கான நிலத்தை ஒதுக்கியுள்ளார். மயில்வாகனம் நூலகம் முதலான பல நூலகங்கள், விளையாட்டுக் கழகங்கள்என்பன இவர் காலததில் நிறுவப்பட்டுள்ளன. புட்டளைவரை மின் விநியோகம் பரவச்செய்துள்ளார்.

கட்சித் திட்டத்தை செய


சேவையாளர் சங்க முதல் தலைவராகவும், அகில இலங்கைக் கிராமசேவையாளர் சங்க ஸ்தாபகருள் ஒருவராகவும் பெருமைபெற்று விளங்குகிருர். வல்வெட்டித்துறைப் பகுதியிலுள்ள சனசமூக நிலையங்கள், வல்வை நல்லிணக்கச்சபை ஆகியவற்றில் பொறுப்புவாய்ந்த பதவிகள் வகித்துள்ளார். வல்வை உதயசூரியன் விளையாட்டுக்கழக உயிர்நாடியாகவும் விளங்குகிருர் கிராம அபிவிருத்தி இயக்கங்களில் தீவிரமாக ஈடுபட்டு வருகிருர்.

### இவரது திட்டங்கள்

வல்வைப் பகுதிக்கு ஒரு விளையாட்டுத் திடல் அமைத்தல், கரையோரப் பகுதி மக்களுக்கு குழாய் நீர் விநியோகம், பருத்தித்துறை மீனவருக்கு வீடமைப்புத் திட்டம், அல்வாய், கற்கோவளம் குடாரப்பு அம்பன் பகுதிகளில் சிரமதான இயக்கமூலம் கிராம புனருத்தாரண வேலைகளைச் செய்தல்; பின்தங்கிய பகுதிகளுக்கென ஒரு மகாவித்தியாலயம் நிறுவுதல் தனிப்பட்ட முறையில் தம்மாலான வரையில் தொழில் வாய்ப்புகள் ஏற்படுத்துதல்

0 0 0

வைத்தியகலாநிதி பூபாலு ஆறுமுகம் விசாகரத்தினம்
(இலங்கை தி. மு. க.)



1926, மாசி, 6ம் திகதி தொண்டமானுற்றில் பிறந்தவர் திரு. விசாகரத்தினம், ஊரிலுள்ள சைவத் தமிழ்ப் பாடசாலையிலும், ஆங்கிலப் பாடசாலையிலும் கல்விபயின்று பின்னர்தமது பரம்பரைத் தொழிலாகிய சித்தவைத்தியத்தை மேற்கொண்டுள்ளார். திரு விசாகரத்தினம் முன்னுள் இராணுவத்தில் சேர்ந்திருந்தார் 2ம் உலகப்போரின் போது தென்கிழக்காசிய நாடுகள் பலவற்றுக்கும் சென்று. ஈற்றில் 1949ம் ஆண்டு சிங்கப்பூரிலிருந்துஇலங்கைக்கு மீண்டவர். சுங்க இலாகா புகையிரதப்பகுதி இவற்றில் கடமையாற்றினுர். மொழிப் பிரச்னைகாரணமாகவே

கூட்டணி வந்தால்

## 'ஜனநாயகத்துக்கு சாவுமணி அடிக்கப்பட்டுவிடும்'

—பிரதமர்

களுத்துறை, ஞாயிறு 'லங்கா சமசமாஜக் கட்சியினர் மக்களை ஏமாற்றுகிருர்கள். இவர்களது களவையும் ஏமாற்று வித்தைகளை நம்பி மக்கள் தவருன வழியில் செல்லக் கூடாது. மக்கள் அவர்களைப் பின்பற்றுவார்களானுல் நாடு முழுவதற்குமே அழிவு வந்து சேரும். கூட்டணி பதவிக்கு வந்தால் ஜனநாயகத்துக்குச் சாவு மணி அடிக்கப்பட்டுவிடும். கூட்டணியினரின் தேர்தல் விஞ்ஞாபனமே இதைக் காட்டுகிறது.'

களுத்துறையில்நடைபெற்றபிரசாரக்கூட்டத்தில்உரையாற்றிய பிரதமர் டட்லி சேனநாயக்கா மேற்கண்டவாறு கூறினுர்.

அவர் மேலும்தொடர்ந்து பேசுகையில் ல. ச. ச. க. அதிபர் டாக்டர் என். எம். பெரேராவைப் பற்றி என்னைத் தவிர வேறு ஒருவரும் சரியாகக் கூறமுடியாது. லங்காசமசமாஜக்கட்சியினர் 1936-ம்ஆண்டு அரசியலில் பிரவேசித்தனர். ஆரம்பத்தில் அவர்கள் தமிழுக்கும் சிங்களத்துக்கும் சம அந்தஸ்த்து வேண்டுமெனக் கோரினர். தற்போது என்னைச் சிங்கள மக்களின் எதிரி எனவும் தமிழ்மக்களுக்கு நான் உதவி செய்வதாகவும் கூறுகின்றனர்.

பௌத்த ஜயந்தி விழாவைக் கொண்டாட முதன் முதல்உதவியது ஐக்கியதேசியக்கட்சியாகும். அப்போது லங்கா சமசமாஜக் கட்சியினர் எதிர்த்தனர். இன்று ஐக்கியதேசியக்கட்சி சாசனத்துக்கு எதிராகவுள்ளதாகப் பிரசாரம் செய்கின்றனர் எனக்கூறினுர்.

திரு. எம் பி. ஜே. டயஸ் திரு. கிங்ஸ்லி விக்ரமசிங்கி உட்படப்பலர் உரையாற்றினர்.

## மக்கள் பட்டினியால் இறப்பர்

பண்டாரகொவஸ்தை ஞாயிறு மக்களின் வாக்குக்களால் அதிகாரத்துக்கு வர இயலுமானுல் அவர்களின் பொருளாதாரப் பிரச்னைகளை நீக்க அவர்களது ஆலோசனைகளை ஏன் ஏற்றுக் கொள்ளக் கூடாது எனப் பிரதமரைக் நான் கேட்க விரும்புகிறேன்.

பண்டார மகாஸ்வத்தையில் நடைபெற்ற சுதந்திரக் கட்சியின் பிரசாரக் கூட்டத்தில் உரையாற்றிய முன்னைநாள் செனட்டர் திரு கரணகொடை மேற்கண்டவாறு கூறினுர்.

தொடர்ந்து பேசுகையில் கூட்டணிபதவிக்கு வந்தால் மக்கள் குழுக்களை நிறுவிவிடும் என ஐக்கிய தேசியக் கட்சியினர் அஞ்சுகின்றனர் இந்த அரசாங்கம் பதவிக்கு வந்தால் மக்கள் பட்டினியால் மடிய வேண்டி நேரிடும் எனக்குறிப்பிட்டார்.


ஸ்ரீ காலிங்கன்
இணுவில்
தினசரி 6-30-10-00 மணி
போயா, பிரிபோயா 2-30
ஜெமினி கணேசன்
நடித்த
எல்லோரும் இந்நாட்டு மன்னர்

வெஸ்லிசினிமா
மானிப்பாய்
தினசரி: 6-30, 10-00
பிரிபோயா, போயா 2-30 மணி
ஜெமினி கணேசன்,
கே. ஆர். விஜயா
நடித்த
ராமு

REGAL JAFFNA
Daily
4-45, 7 & 9-45 p.m.
Pre poya, Poya 10-30 A.M
George Peppard
&
Gayle Hunnicut
in
P. J.
(Adults only)

MANOHARA
JAFFNA
Daily 4-45, 7&9-45 p.m.
Prepoya, Poya 4 shows
Clint East wood
&
Susan Clark
in
COOGAN'S BLUFF
(Adults only)

ராஜா
(யாழ்ப்பாணம்)
தினசரி 3 காட்சிகள்

சிவாஜி - ஜி. வரலக்ஷ்மி
நம்பியார் - தங்கவேலு
நடித்த


Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

வற்றிற்கும் யாழ். கச்சேரிக்கும் அண்மையில் உள்ளது. விண்ணப்பிக்கவும். விளம்பர இல. 2094, C/o 'ஈழநாடு', யாழ்ப்பாணம். 2094

---

கடை:

கன்னாதிட்டி ரேட் 70-ம் இலக்கத்தில் புதிதாக அமைக்கப்பட்ட சகல வசதிகளுடன் கூடிய ஒரு கடைகள் வாடகைக்குண்டு. விபரங்களுக்கு 23/2, கல்லூரி வீதி, நீராவியடி, யாழ்ப்பாணம். 2100

கட்சியால் நடாத்தப்பட்ட ஸ்ரீ எதிர்ப்பியக்கம், சத்தியாக்கிரகம் ஆகியவற்றில் பங்குபற்றிப் பல முறை தடுப்புக்காவற் சிறையில் வைக்கப்பட்டவர். சத்தியாக்கிரகத்தில் தமது அருமை மனைவி திருமதி மங்கையற்கரசி அமிர்தலிங்கத்தையும் பங்கெடுக்கச்செய்ததின் மூலம் அவரது மனைவியும் தடுப்புக்காவலில் இருக்க நேர்ந்தது.

1956-ம் ஆண்டுமுதல் கட்சியின் தீவிரவாதியாக விளங்கி வதற்கும், வேலையில்லாத் திண்டாட்டத்தைப் போக்குவதற்குமாகவே தமது 6 வருடகால அதிபர் பதவியையும் பொருட்படுத்தாமல் உதறித்தள்ளிவிட்டுத் தேர்தலில் இறங்கியுள்ளதாக அவர் கூறுகிறார்.

அடையாற்றில் கல்வி பயின்று, மலாய் நாட்டில் வைத்திய கலாநிதிக்குப் படித்த திரு. தியாகராசா இந்தியா சென்று அங்கு சென்னைப் பல்கலைக்கழகத்தில் எம். ஏ. எம்.லிற். பட்




உங்கள்
புடவைகள் நிலையான
மெருகுடன் திகழ இதோ
பேயர்
கசெல்லா
அக்ரமின்
லிவாபிக்ஸ்
இன்டான்தரன்
இன்டோசாபன்
BAYER
பிளாங்கோபோர்
ரெலோன்
சோலிடாஜெல்
CASSELLA
ரெசோலின்
சீரியஸ் சுப்பா
டொலிசின்தரன்
ரேலமின்
உங்கள் பருத்தி, ஸிந்தெட்டிக் புடவைகளுக்கு நிலையான மெருகூட்டுவதற்காக, உலகப்பிரசித்திபெற்ற, பெயர் கசெல்லா, நிறம் மங்காத சாயப்பொருள் பசை மற்றும் சிணைப்பொருள்களை வழங்குகின்றார்கள்.
உங்கள் ஒவ்வொருவரினதும் தனிப்பட்ட தேவையைப் பூர்த்தி செய்யும் நோக்கத்துடன் நிறுவப்பட்ட எமது நவீன ஆய்வு கூடச் சேவையை பயன் படுத்திக்கொள்ளுங்கள்.
HAYLEYS
ஹேலிஸ் லிமிட்டெட்
400, டீன்ஸ் ரோட், கொழும்பு-10. தொலைபேசி: 96533.


ஆண்டு மார்ச் மாதம் நடைபெற்ற தேர்தலில் போட்டியிட்டு வெற்றிகொண்டார். அப்போது இவருடன் ஐவர் போட்டியிட்டனர். 1960ம் ஆண்டு ஜூலையில் திரு. ந. நடராசாவுக்கும் இவருக்கும் நேரடிப்போட்டி நடைபெற்றது. இதில் நாலாயிரத்து ஐநூறு அதிகப்படியான வாக்குகள் பெற்று வெற்றிகொண்டார்.

1965-ல் திரு. நடராசாவுடன் போட்டியிட்டு 950 அதிகப்படியான வாக்குகள் பெற்றார்

பத்தாண்டு பாராளுமன்ற அனுபவம் பெற்ற திரு. துரைரத்தினம் மீன்பிடித் தொழிலின் நுட்பங்களைக் கற்றுணர்ந்து மீனவர்களுக்கே சொல்லிக் கொடுக்கும் ஆற்றல்பெற்றவர். விவசாயத்துறையிலும் ஆராய்ச்சி கொண்டுள்ளார்

ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சியின ஆட்சிக்காலத்தில் இஸ்ரேலுக்குச்சென்ற இவர் வரண்ட பாலைவனத்தில் வாழ்வமைக்கும் மக்களைப் போல் யாழ்ப்பாணத்திலும் விவசாய முன்னேற்றம் காண விழைந்தார். இஸ்ரேல் திராட்சைக் கொடிகளை வரவழைத்து தாளையடி தொடங்கி இரணைதீவு வரையிலும் திராட்சைத் தோட்டங்கள்பல்கிப் பெருக வழிவகுத்துள்ளன.

வெங்காய வகைகள் உருளைக்கிழங்கு விருத்திக்கு உழைத்துள்ளார். மீனவர்கள் வாழ்வு வளம்பெற கணிசமான மதிப்பு கடல் அட்டைகளுக்குண்டென்பதை உணர்த்தி மீண்டும் அத்தொழிலில் ஈடுபடச் செய்துள்ளார்.

வடமராட்சியில் கண்ணாடித் தொழிற்சாலை ஒன்றை அமைக்கவேண்டுமென்று மக்கள் மன்றத்தில் முதலில் குரல் எழுப்பியவர் திரு. துரைரத்தினம்.

0 0 0

**திரு. நமசிவாயம் நடராசா**
**(தமிழ்க் காங்கிரஸ்)**



பருத்தித்துறைப் பட்டின சபையில் 22வருடகாலமாக தொடர்ந்து தலைவராக இருந்த பெருமைபெற்றவர் திரு. நடராசா.

இவர் தனது ஆரம்பக் கல்வியைப் பருத்தித்துறை

பல நூலகங்கள், விளையாட்டுக் கழகங்கள்என்பன இவர் காலத்தில் நிறுவப்பட்டுள்ளன. புட்டளைவரை மின்சார விநியோகம் பரவ வழிசெய்துள்ளார்.

கட்சித் திட்டத்தை செயலாக்குதல், பருத்தித்துறைத் தொகுதியில்மீன்பிடித்துறைமுகம் ஒன்றை நிறுவுதல் அம்பன், குடத்தனை, நாகர்கோவில் முதலிய பின்தங்கிய பகுதிகளின் போக்குவரத்துச் சேவையை விஸ்தரித்தல் முதலியனவற்றை தனது திட்டங்களுள் சேர்த்துள்ளார்.

மேற்குறிப்பிட்ட பகுதிச் சிறுவர்களுக்கான மகாவித்தியாலயத்தை நிறுவுவதுடன், வல்லிபுரத்தில் கண்ணாடி ஆலை உண்டாக்கல், அம்பன், வல்வை என்பனவற்றிலுள்ள வைத்தியசாலை சகல நவீன வசதியுடன் விஸ்தரித்தல், பருத்தித்துறையில் நவீன சந்தையை உருவாக்கல், பஸ்நிலையத்தைப் புதுக்குதல், விளையாட்டு மைதானங்களை அமைத்தல், தனிப்பட்டோர்களின் வீடுகளில் அமைந்துள்ள அரச பணியகங்களுக்குபொதுக்கட்டடங்கள் அமைத்தல் இவைகளே அவரின் வேலைத்திட்டங்களாகும். திரு. நடராசா 1960 மார்ச், ஜூன் தேர்தல்களிலும் 1965-ம் ஆண்டு தேர்தலிலும் பருததித்துறை தொகுதியில் போட்டியிட்டவர் என்பது குறிப்பிடத்தக்கது

0 0 0

**பொன்னுச்சாமி கனகராசா**
**(தமிழர சுயாட்சிக் கழகம்)**



வல்வை ஊரிக்காட்டைப் பிறப்பிடமாகக் கொண்ட திரு. கனகராசா, 1937-ம் ஆண்டு செப்ரெம்பர் 17-ல் பிறந்தார் வல்வை சிதம்பராக் கல்லூரிதிருகோணமலை அர்ச் ஜோசெப் கல்லூரிகளிற் பயின்ற இவர் புகையிரதப்பகுதியிலும் அரசாங்க அச்சகத்திலும், கடமையாற்றியதுடன், கொழும்பு அன்டர்சன் கல்லூரியில் ஆசிரியராகவும் கடமையாற்றியுள்ளார். பருத்தித்துறை நகரப்பகுதியில் ஐந்து ஆண்டுகள் கிராமசேவகராகவும் இவர் கடமையாற்றியுள்ளார் இதன் தொடர்பாக இவர்வடபகுதி கிராம

தென்கிழக்காசிய நாடுகள் பலவற்றுக்கும் சென்று. ஈற்றில் 1949ம் ஆண்டு சிங்கப்பூரிலிருந்துஇலங்கைக்குமீண்டவர். சுங்க இலாகா புகையிரதப்பகுதி இவற்றில் கடமையாற்றினர். மொழிப் பிரச்னைகாரணமாகவே அரசாங்க சேவையிலிருந்துவிடுபட்டார்.

1958 இனக்கலவரத்தின் போது கல்கிசை காவல் நிலையம், சரஸ்வதி மண்டபம், றோயல் கல்லூரி போன்ற நிலையங்களில் அகதிகளாகப் புகுந்த தமிழ்மக்களுக்காக அரும்பாடுபட்டார். 1964ல் கொழும்பு மாநகரில் 'பிடியரிசி' இயக்கத்தில் ஈடுபட்டு, தமிழ்மக்கள் நினைத்தால் ''சிறுதுளி பெருவெள்ளம்'' என்ற அடிப்படையில் தமிழ்மக்களின் பொருளாதார அபிவிருத்திக்கு வழிவகுக்கலாம் மென்ற உணர்வை ஏற்படுத்தினர். 1965ல் கரவெட்டிப்பகுதியில் கூட்டப்பட்ட மாநாடொன்றின் மூலம் தமிழ்த்தலைவர்களை ஒன்று சேர்க்கும் முயற்சியில் ஈடுபட்டவர். இதனால் ஏற்பட்ட சோர்வே இவரைத் தேர்தலில் குதிக்கச் செய்தது.

இன்றையஅரசியல்திட்டம் தமிழ் மக்களின் துயர்களைத் துடைக்கவோ, இழந்த உரிமைகளைப் பெறவோ அருகதை யற்றது என்பது இவர் முடிவு. தேசிய ரீதியானஇயக்கங்களில் தமிழர் ஈடுபட்டால், பிற இன மக்களின் நல்லெண்ணத்தையும், நம்பிக்கையையும் பெறலாமென்பது இவரது நம்பிக்கை.

தாம் ஆட்சி மன்றத்துக்குத் தெரிவுசெய்யப் பட்டால், வெறும் சலுகைகளுக்காக மட்டுமன்றி, உரிமைகளுக்கும் போராடத் திடசித்தம் பூண்டுள்ளதாகவும் இவர் கூறிகிறார்.

மக்கள் தனக்கு ஒரு சந்தர்ப்பம்தந்தால் ஒரு 'மாதிரி அமைப்'பாசப் பருத்தித்துறைத் தொகுதியை, ஒரு சுய இயக்கக் கருவாகக் கொண்டு, மீனவர், விவசாயிகள், ஆசிரியர், மாணவர், பாட்டாளிகள் போன்ற பல தரப்பட்ட சமூகத்தவரின் நலவுரிமைகளையும் பேணிப் பாதுகாக்க அவர்களின் ஆலோசனையின் அடிப்படையில் ஜனநாயக ரீதியில் உழைப்பதே தமது திட்டம் எனவும் இவர் கூறுகிறார். இந்திய தி மு க வுடன் எவ்வித தொடர்புமற்ற இலங்கை தி மு க கொடியின் கீழ் ஓர் ஒப்புரவுச் (சோஷலிச) சகோதரத்துவ சமுதாயத்தை அமைக்கப் பாடுபடுவதே தமது இலட்சியம் எனத் திரு. விசாகரத்தினம் கூறுகிறார்.

(Adults only)

யால் மடிய வேண்டி நேரிடும் எனக்குறிப்பிட்டார்.


ராஜா (யாழ்ப்பாணம்) தினசரி 3 காட்சிகள்
சிவாஜி - ஜி. வரலக்ஷ்மி
நம்பியார் - தங்கவேலு
நடித்த
ஹரிச்சந்திரா

ராணி (யாழ்ப்பாணம்) தினசரி 3 காட்சிகள்
சிவாஜி, கே ஆர் விஜயா
நாகேஷ்-பாலாஜி-பேபி ராணி
நடித்த
திருடன்

வின்ஸர் யாழ்ப்பாணம் தினசரி 4 காட்சிகள்
சிவாஜிகணேசன் — பாரதி
மற்றும் பலர் நடித்த
தங்கச் சுரங்கம்
(முழுநீள ஈஸ்ட்மன் கலர் சித்திரம்)

மகத்தான 82-வது தினம்
வெலிங்டன் யாழ்ப்பாணம்
தினசரி பி ப 2-30, மாலை 6-30, இரவு 9-30 மணி.
(போயா, பிரிப்போயா காலை 10-30)
1968-ம் ஆண்டின் சிறந்த படத்திற்குரிய ஜனாதிபதியின் பிராந்தியப் பரிசு பெற்ற வெற்றிச்சித்திரம்







சிவாஜிகணேசன் - பத்மினி
பாலையா, நாகேஷ், நம்பியார்
மற்றும் பலர் நடித்த
தில்லானா மோகனாம்பாள்

இப்பொழுது காண்பிக்கப்படுகின்றது
கெப்பிட்டல் (கொழும்பு)
பிளாஸா (வெள்ளவத்தை)
மற்றும் சில சினிமாஸ் திரைகளில்
எம். ஜி. ஆர். - ஜெயலலிதா
ரங்கராவ், பேபி பத்மினி, நாகேஷ்
இன்னும் பலர் நடித்த
பி. நாகிரெட்டி அளிக்கும்
நம் நாடு
(ஈஸ்ட்மென் கலர்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வட வியட்நாம் மீது மீண்டும் அமெரிக்க குண்டு வீச்சு

## கம்போடியாவில் கம்யூனிஸ்டுகள் பின்வாங்குகிறார்கள்

நியுயோர்க், மே 3

**வடவியட்னமில் விரிவான முறையில் அமெரிக்க சண்டை விமானங்கள் குண்டுமாரி பொழிந்திருப்பதாக அமெரிக்க அதிகாரிகள் ஒப்புக் கொண்டுள்ளனர்.**

**உளவு வேலைகளில் ஈடுபடும் அமெரிக்க விமானங்களை வட வியட்னமியர் தாக்கியதைத் தொடர்ந்து வட வியட்னம் நிலைகள் மீது அமெரிக்க விமானங்கள் குண்டுகளை வீசி தாக்குதல் நடத்தியுள்ளனவென்று அறிவிக்கப்பட்டது.**

இதற்கு முன்னர் அமெரிக்கப் பாதுகாப்பு அமைச்சர் திரு. லெயார்ட் விடுத்த ஓர் அறிக்கையில் கம்போடியாவிலுள்ள வியட்காங் தலைமை முகாம் மீது அமெரிக்கர்கள் மேற்கொண்டுள்ள தாக்குதல்களுக்கு எதிர் நடவடிக்கையாக தென்வியட்னம் மீது பெருமளவில் தாக்குதல் மேற்கொண்டால் வடவியட்னம் மீது அமெரிக்கா மீண்டும் குண்டு வீசவேண்டும் என்று தாம் சிபார் செய்ய வேண்டியிருக்குமென்று எச்சரிக்கை விடுத்திருந்தார்.

கம்போடியாவிலுள்ள கம்யூனிஸ்ட் முகாம்கள் அனைத்தையும் முற்றாகவே அழித்து விடுவதற்கு அமெரிக்கா உறுதிகொண்டிருக்கிறது என்று அவர் தெரிவித்திருக்கிறார்.

வட வியட்னமில் கம்போடியாவுடனான எல்லைப் பிரதேசம் அடிக்கடி தாக்குதலுக்குள்ளாகுமென்றும் அவர் குறிப்பிட்டார்.

இப்பகுதியில் கம்யூனிஸ்ட் ஊடுருவலைத் தடுக்கவே இந் நடவடிக்கையாம்.

### ஹனோய் குற்றச்சாட்டு

வடவியட்னமியரின் தென் பகுதியில் இருமாகாணங்களில் அமெரிக்க விமானம் பொதுமக்கள் வாழும் பகுதிகளில் குண்டுகளை வீசி ஏராளமான பொதுமக்களைப் பலியிட்டிருப்பதாகவும் இவர்களில் 20 பேர் குழந்தைகள் என்றும் ஹனோய் குற்றஞ் சாட்டியிருக்கின்றது.

### 400 பேர் கொலை

கம்போடியாவிற்குள் அமெரிக்கத் துருப்புகள் நுழைந்து தாக்குதலை மேற்கொண்டபின்னர் சுமார் 400 கம்யூனிஸ்ட்டுகள் கொல்லப்பட்டிருப்பதாகவும் தங்கள் தரப்பில் 5பேர் பலியானதாகவும் அமெரிக்கர் அறிவித்துள்ளனர்.

அமெரிக்க- தென்வியட்னமியரின் கூட்டுத்தாக்குதலை சமாளிக்க முடியாத வியட்காங்கியர் கம்போடியாவுக்குள் மேலும் வெகுதூரம் பின்னடைந்திருப்பதாகக் கருதப்படுகின்றது. கம்போடியாவிலிருந்து இக்கம்யூனிஸ்ட்டுகள் அனைவரையும் துரத்தியடிக்கும்வரை அமெரிக்கத் துருப்புகள் பின்னடைய மாட்டார்கள் என்று கூறப்படுகின்றது.

கம்போடியாவுக்குள் அமெரிக்கர் பிரவேசித்திருப்பது அமெரிக்க ஆட்சிமன்றத்தில் பலத்த வாக்குவாதங்களைக் கிளப்பியிருக்கின்றது. இம்மாத இறுதியில் வியட்னம் சண்டைக்கான பண ஒதுக்கீடு மசோதா விவாதத்திற்கு வரும்போது அதனைப் பலமாக எதிர்ப்பதற்கு பல செனட்டர்கள் முடிவுசெய்திருக்கிறார்கள்.

### இலங்கையும் போகாது

கம்போடியா சம்பந்தமாக ஜகார்த்தாவில் நடைபெறவிருக்கும் ஆசியநாடுகளின் மாநாட்டில் இலங்கையும் கலந்துகொள்ளவியலாதென அறிவித்திருக்கின்றது.

இந்தோனேஷிய அரசின் ஆதரவில் நடைபெறும் இம் மாநாட்டில் இந்தியாவும் கலந்துகொள்ளப் போவதில்லை என்று ஏற்கனவே அறிவிக்கப்பட்டிருக்கின்றது.

இந்தோசீனாவிலுள்ள எந்த ஒரு நாடும் கலந்துகொள்ளாத ஒரு மாநாட்டில் அங்குள்ள பிரச்னைகளுக்கு எதுவித முடிவும் காணமுடியாது என்று இந்தியா தெரிவித்துள்ளது. வேண்டுமானால் மண்டலசார்பற்ற நாடுகளின் மாநாடொன்றை இது சம்பந்தமாக கூட்டலாம் எனறு இந்தியா யோசனை கூறியிருக்கின்றது.

## நிக்ஸன் நடவடிக்கை

## "தெருச்சந்தியிலே சந்திப்போம்!..."

### நக்ஸல்பாரிகளுக்கு ஜனசங்கின் சவால்

ஹைதராபாத், மே 3

மேற்கு வங்காளத்தில் நக்சல்பாரிகள் கொலை கொள்ளை போன்ற வெறியாட்டங்களைத் தொடர்ந்து செய்தால், அவர்களை ஜன சங்கம் தெருச்சந்திகளில் கவனித்துக்கொள்ளும் சட்டசபைக்குள் பொதுவுடமையரை எதிர்த்துப் போராடும் என்று ஜனசங்க பொதுஎாளர் திரு. நானுஜிதேஸ்முக் கூறினார்.

கல்கத்தாவில்நடைபெற்ற கூட்டமொன்றில் ஜன சங்கத்தலைவர் திரு. வாஜபேயி பேசினார்.

கேரளத்தில் 30க்கு மேற்பட்ட மோதல்கள் ஜனசங்கத்திற்கும் பொதுவுடமைவாதிகளுக்குமிடையே நடந்துள்ளது. இது உள்நாட்டுப் போரை உருவாக்கினாலும் நாட்டுக்கு நல்லதே என்று கேள்வி ஒன்றுக்கு பதிலளிக்கையில் அவர் கூறினார்.

வெளியார் ஆதிக்கத்தின் கீழ் இயங்கும் கட்சி ஆதிக்கம் செலுத்தும் மேற்கு வங்கத்தில் வெளியார் ஆக்கிரமிப்பு நடைபெற்றால் அரசாங்கம் என்னசெய்யும் என அவர் கேட்டார்.

குஜராத்தில் இடைத்தேர்தல் நடத்துவதொன்றேவழி என்று அவர் சொன்னார்.

பிரிட்டனில்

## கருத்தடை சிகிச்சையில் ஆண்கள் ஆர்வம்

லண்டன், மே.3

பிரிட்டனில் கருத்தடை சத்திர சிகிச்சை செய்து கொள்வதில் ஆண்கள் தீவிர ஆர்வம் காட்டத் தொடங்கியுள்ளனர்.

கருத்தடை மாத்திரைகளைப் பற்றிய அநாவசிய பீதிகளை அடுத்தே, கருத்தடை சத்திர சிகிச்சையான 'வாசக்டமி' செய்வதில் ஆண்கள் மோகம் கொள்ள ஆரம்பித்துள்ளனர். குடும்பத் திட்ட ஆஸ்பத்திரியில் ஆண்களின் கியூ வரிசைகள் நீண்டு வருவதைக்கொண்டு பிரிட்டிஷ் மாதர்களில் எத்தனைபேர் மாத்திரை உட்கொள்வதை நிறுத்தி உள்ளனர் என்பதைக் கணக்கெடுக்கமுடியும், என்று கூறப்படுலாம் என்று எதிர்பார்க்கப்படுகிறது

வருமானம் குறைந்தவர்களின் நன்மைக்காக தேசிய சுகாதாரசேவையின் வாசக்டமி சத்திர சிகிச்சையை இலவசமாக செய்து கொடுப்பது பற்றி பிரிட்டிஷ் அரசாங்கம், தற்சமயம் ஆலோசித்து வருகின்றது தற்சமயம், வாசக்டமி செய்ய கட்டணம் செலுத்த வேண்டும்.

ஆண்டுதோறும்பிரிட்டனில் சுமார் இரண்டரைலட்சம் குழந்தைகள் பிறக்கின்றன என்றும் இதனால் பொது மக்களின் வரிப்பணத்தில் பெருந்தொகை, இந்தப்பிள்ளைகளை பராமரிப்பதில்விரையமாகிறது என்றும் கூறப்ப

## வேலணைச் செய்திகள்

### பாம்புபோல் ஆடிய பெண்

நல்லபாம்பினால்கடியுண்ட 8 பிள்ளைகளின்தாய்வேலணை கிழக்கு விஷகடிவைத்திய நிலையத்தில் அனுமதிக்கப்பட்ட சில நிமிஷங்களின் பின் மகுடிமுன் ஆடும்பாம்பு போல் ஆடியதை பலர் அவதானித்தனர். ஆபத்தான நிலையில் அனுமதிக்கப்பட்ட இப்பெண் புங்குடுதீவு 7-ம் வட்டாரத்தைச் சேர்ந்த 8 பிள்ளைகளின் தாய் அன்னப்பிள்ளையாவர் இப்பொழுது இவர் பூரண சுகமடைந்து வருகிறார்.

### விவசாய விழா

தீவுப்பகுதி விவசாயவிழா வேலணை மத்திய மகாவித்தியாலய மண்டபத்தில் நடைபெற்றது. வடமாகாண விவசாய அதிபர் திரு. பொ. மாணிக்கவாசகர் குத்து விளக்கேற்ற திரு. சரவணமுத்து தேசியக் கொடியை ஏற்றியதையடுத்து தீவுப் பகுதிக் காரியாதிகாரி திரு. விநாயகலிங்கம் தலைமையில் விழா ஆரம்பமாகியது. இளைஞர் விவசாய சங்கங்களின் சமாஜத் தலைவர் திரு. சி. சிறீஸ்கந்தராசா சரவணமுத்துத்நித்தியானந்தம் உரையாற்றியபின் தீவுப் பகுதி கமத்தொழில் பகுதி சார்பில் விவசாய அறிவுப் போட்டி நடத்தப்பட்டு பரிசுகள் வழங்கப்பட்டன பரிசளிப்பின்போது வேலணை கலைமகள் வேலணை மத்திய காரைநகர், புங்குடு தீவு, இளைஞர் விவசாயச் சங்கங்கள் இதில் பங்குபற்றின

அறிவுப்போட்டியில் பரிசு பெறுவோர் கா மகாலட்சுமி, கலைமகள் இளைஞர் விவசாய சங்கம். பொ மாணிக்கவாசகர், வேலணை மத்திய இளைஞர் விவசாயசங்கம், மாணிக்கராசா கலைமகள் இ. வி. சங்கம்

திருப்தியாகஇயங்கும் சங்கங்களுக்கான பரிசை கலைமகள் இளைஞர் விவசாயச் சங்கமும். வேலணை மத்திய இளைஞர் விவசாயச் சங்கமும் பெற்றன.

வட மாகாண விவசாய அதிபர் பரிசில்களை வழங்கினார், வைபவ முடிவில் படக் காட்சியும் இடம் பெற்றது.

### திருட்டு

அராலிச்சந்திக்கும் அல்லைப்பிட்டிக்குமிடையில் அடிக்கடி தந்திக்கம்பித்திருட்டு நடைபெறுகிறது. இத்திருட்

## அரபு நிலைகள் மீது இருகடும் தாக்குதல்

### இஸ்ரேலியர் நடத்தினர்

டெல் அவிவ், மே 3

சூயஸ்கால்வாய்ப் பிரதேசத்தில் ஐக்கிய அரபுக் குடியரசு நிலைகள்மீது இஸ்ரேலியர் நேற்று இரு தடவைகள் ஊடுருவிச் சென்று கடுமையான தாக்குதல்களை நடத்தியிருப்பதாக அறிவித்துள்ளனர்.

எகிப்திய நிலைகள்மீது கடும் தாக்குதல்களை நடத்திய தமது விமானங்கள் யாவும் பத்திரமாக திரும்பி விட்டதாக இஸ்ரேலியர் கூறினார்கள். ஆனால் ஓர் இஸ்ரேலிய விமானம் சுட்டு வீழ்த்தப்பட்டதாக எகிப்தியர் அறிவித்துள்ளனர்.

ஜோர்டான் எல்லையில் நேற்று ஏற்பட்ட ஒரு கைகலப்பில் ஜோர்டான் கொரில்லாக்கள் பலருக்கு காயம் ஏற்பட்டிருக்கலாம் என்று கூறப்பட்டது.

லெபனானின் அரபுக் கொமாண்டோக்களுக்கும், அரசுப் படைகளுக்குமிடையில் ஏற்பட்ட ஒரு மோதலில் 2 கொரில்லாக்கள் கொல்லப்பட்டுள்ளனர். இஸ்ரேலியர் நிலைகள் மீது கொரில்லாக்கள் தாக்குதல் நடத்தியபோது அரசுப் படைகள் தலையிட்டதால் இந்த மோதல் ஏற்பட்டதாம்.

## 'இலங்கை ஆட்சிமன்றம் சங்கீதக்கதிரை போன்றது"

— திரு. சண்முகதாசன்

வெள்ளவத்தை, ஞாயிறு

'இந்நாட்டு ஆட்சியின் அதிகார பீடம் காலத்துக்குக் காலம் மாறி வருகிறது. சங்கீதக் கதிரையில் வெவ்வேறு மனிதர்கள் உட்காருவது போன்றுதான் அரசாங்கத்திலும் வெவ்வேறு குடும்பத்தினர் மாறி மாறி உட்கார்ந்து கொள்கிறார்கள். பாராளுமன்ற ஆட்சி முறையினால் இந்த நாட்டின் பாட்டாளி-விவசாயி மக்களுக்கு எவ்வித இலாபமும் இல்லை. யு.என்.பி. முதலாளித்துவம் நிலப்பிரபுத்துவம் ஆகியவற்றுக்கு எதிரான சகல முற்போக்கு சக்திகளையும் ஒன்று சேரும்படி அழைக்கிறேன். எதிர் வரும் பாராளுமன்றப் பொதுத் தேர்தலைப் பகிஷ்கரித்து உங்கள்வோட்டுக்களையும் பகிஷ்கரிக்கும்படி எனது கட்சித் தோழர்களைக் கேட்டுக் கொள்கின்றேன், பாட்டாளி- விவசாயிகள் ஒன்று பட்டுத் தமது உரிமைகளை வென்றெடுக்கவும் புரட்சிகரப் பாதையில் முன்னெடுத்துச் செல்லவும் எம்மோடு இணையும்படி வேண்டுகோள் விடுக்கிறேன்'.

இவ்வாறு சீனசார்பு கம்யூனிஸ்ட் கட்சியைச் சேர்ந்தவரும் இலங்கை தொழிற் சங்க சம்மேளனம் பொதுச் செயலாளருமான என்.சண்முகதாசன் கொழும்பு ஹைட்பார்க்கில் நடைபெற்ற மேதினக் கூட்டத்தில் உரை நிகழ்த்துகையில் குறிப்பிட்டார்.

பாட்டாளி- விவசாயிகளின் ஒற்றுமைக்கான கோஷங்களை ஒலித்துச் சென்ற பீகிங் சார்பு கோஷ்டியினர் தமது பிரமாண்டமான ஊர்வலத்தின்போது மக்கள் சீனத்தின் மாபெரும் தலைவர் 'மா சேதுங்' கின் பெரிய அளவிலான உருவப் படத்தையும் தம்முடன் எடுத்துச் சென்றனர்.

## வெள்ளநிவாரண நிதிக்குழு நன்றி கூறுகிறது

யாழ்ப்பாணம், திங்கள்

கடந்த வருடம் வெள்ளத்தால் பெரிதும் பாதிக்கப்பட்ட மாத்தறை, மட்டக்களப்பு அகதிகளுக்கு உதவி செய்யுமுகமாக யாழ் மாவட்ட வெள்ள நிவாரண உதவிக்குழு யாழ். பொது மக்களிடம் இவ்வருடம் ஹக்மன பகுதிகளில் வீடுகள் அமைப்பதற்குப் பயன்படுத்தப்படுகிறது. மட்டக்களப்பு அரசாங்க அதிபருக்கும் இதேபோன்று 10,000 ரூபா வீடுகள் அமைப்பதற்கு அனுப்பிவைக்கப்பட்டுள்ளது. தற்போது மீதியாகவுள்ள ரூபா 2198-ம் இன்

Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

…றுப்

குற்றச்சாட்டு

வடவியட்னமியரின் தென் பகுதியில் இருமாகாணங்க…

…அமெரிக்கர் பிரவேசித்திருப்பது அமெரிக்க ஆட்சி மன்றத்தில் பலத்த வாக்குவாதங்களைக் கிளப்பியிருக்…

…சம்பந்தமாக கூட்டலாம் எனறு இந்தியா யோசனை கூறியிருக்கின்றது.

…ஆண்களின் நீண்ட வரிசைகள் நீண்டு வருவதைக்கொண்டு பிரிட்டிஷ் மாதர்களில் எத்தனைபேர் மாத்திரை உட்கொள்வதை நிறுத்தி உள்ளனர் என்பதை கணக்கெடுக்கமுடியும், என்று கூறப்படுகிறது.

கடந்த ஆண்டில் சுமார் 20,000 பிரிட்டிஷ் ஆண்கள், தனிப்பட்ட மருத்துவ மனைகளில் வாசக்டமி செய்துகொண்டனர் எனத் தெரிகிறது, இவ்வாண்டில் இந்த எண்ணிக்கை 40,000 ஆக

…சுமார் இரண்டரைலட்சம் குழந்தைகள் பிறக்கின்றன என்றும் இதனால் பொது மக்களின் வரிப்பணத்தில் பெருந்தொகை, இந்தப்பிள்ளைகளை பராமரிப்பதில்விரையமாகிறது என்றும் கூறப்படுகிறது.

பிரிட்டனில் கடந்த ஆண்டில் 54,000 கருச்சிதைவுகள் நடைபெற்றன. கள்ளத்தனமாக மந்திர வாதிகளால் நடைத்தப்பட்டகருச்சிதைவுகளுக்கு கணக்கு விபரம் கிடையாது.

…அதிபர் பரிசில்களை வழங்கினர், வைபவ முடிவில் படக்காட்சியும் இடம் பெற்றது.

## திருட்டு

ஆனாலிச்சந்திக்கும் அல்லைப்பிட்டிக்குமிடையில் அடிக்கடி தந்திக்கம்பித்திருட்டு நடைபெறுகிறது. இத்திருட்டின்மூலம்இப்பகுதித் தந்திச் சேவையும் பாதிக்கப்படுகின்றது.

## போராட்டத்தின் வாயிலில்..

திரு: மு. நாகராசா தலைமையில் நடைபெற்ற சரவணை கட்சிக்கிளை அமைப்புக் கூட்டத்தில் பண்டிதர் கா. பொ. இரத்தினம் பேசுகையில், ''தமிழரசுக்கட்சி உரிமைகளைப் பெறுதற்கு தொடர்ந்து போராடிவந்தது. பின்னர் ஒத்துழைத்து பெறும் வாய்ப்பு ஏற்பட்ட பொழுது அதையும் சில நிபந்தனைகளுக்கு அமையப் பயன் படுத்தியது. ஆனால் ஒத்துழைப்பின் மூலம் இழந்த உரிமைகளை முழுவதும் பெற முடியாது என்பதை உணர்ந்தவுடன் அரசாங்கத்தை விட்டு விலகிபோராட்டத்தின் வாயிலில் இப்பொழுது தமிழரசுககட்சி நிற்கிறது'' எனக்கூறினர். மற்றும் திருவாளர்கள் மு. நாகலிங்கம், கு. நகுலேச பிள்ளை, மு. சோமசுந்தரம், வை. குருமூர்த்தி, வை. பரம சுந்தரம் ஆகியோர் பேசினர். அண்மையில் நடைபெற்ற தமிழரசுக்கட்சிக் கிளை அமைப்புக் கூட்டத்தின் போது உத்தியோகஸ்தர்

கிளை உத்தியோகஸ்தர்களாகப் பின்வருவோர் தெரியப்பட்டனர்: தலைவர்- மு நாகராசா துணைத்தலைவர்கள்: இ. நகுலேசபிள்ளை, நா. அருமைநாயகம், மு திருநாவுக்கரசு. செயலாளர் வே. இராசையா, துணைச் செயலாளர் வே. சுந்தரம் பிள்ளை பொருளாளர் க. அருணாலம். மற்றும் 11 நிர்வாகசபை உறுப்பினரும் தெரிவு செய்யப்பட்டனர்.

## த. அ. வா. முன்னணி

அண்மையில் சரவணையில் நடைபெற்ற தமிழரசுக் கட்சியின் சரவணை வாலிப முன்னணி அமைப்புக் கூட்டத்தின்போது உத்தியோகஸ்தர்கள் தெரிவுநடைபெற்றது.

தலைவர்: திரு. வை. குருமூர்த்தி, உப தலைவர்: திரு. தி சண்முகலிங்கம் செயலாளர், திரு. சோ. தணபாலசிங்கம், உப செயலாளர் திரு. சே. சிவலிங்கம், பொருளாளர்: திரு. இ. வேலுப்பிள்ளை, உப பொருளாளர்: சு. சந்திரசேகரம். மற்றும். 12 நிர்வாகசபை உறுப்பினரும் தெரிவு செய்யப்பட்டனர்.

கடந்த வருடம் வெள்ளத்தால் பெரிதும் பாதிக்கப்பட்ட மாத்தறை, மட்டக்களப்பு அகதிகளுக்கு உதவி செய்யுமுகமாக யாழ் மாவட்ட வெள்ள நிவாரண உதவிக்குழு யாழ். பொது மக்களிடம் இவ்வருடம் ஜனவரி மாதம் உதவி கோரியமை யாவரும் அறிந்ததே.

இந்தவேண்டுகோளின் பலனாக மக்கள் வழங்கிய பல்வேறு பொருட்கள் மட்டக்களப்பு வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட அகதிகளுக்கு மட்டக்களப்பு அரசாங்க அதிபர் மூலம் வழங்கப்பட்டுள்ளன,

இன்றுவரை ரூபா 22,198-52 சேகரிக்கப்பட்டுள்ளது. இதில் 10,000 ரூபா மாத்தறை அரசாங்க அதிபருக்கு அனுப்பிவைக்கப்பட்டது. இந்தப்பணம் மாத்தறை மாவட்டத்திலுள்ள றன்சகொடை,

…அமைப்பதற்குப் பயன்படுத்தப்படுகிறது. மட்டக்களப்பு அரசாங்க அதிபருக்கும் இதேபோன்று 10.000 ரூபா வீடுகள் அமைப்பதற்கு அனுப்பிவைக்கப்பட்டுள்ளது, தற்போது மீதியாகவுள்ள ரூபா 2198-ம் இன்னும் சேகரிக்கப்பட்ட ஒரு தொகைப்பணமும் மட்டக்களப்பு அரசாங்கஅதிபருக்கு அங்குள்ள வெள்ள அகதிகளுக்கு உதவிசெய்யவழங்கப்படவுள்ளது.

இப்பெருந்தொகைப் பணத்தை வழங்கிய மக்களுக்கும் பணமாகவும் பொருள்களாகவுப் சேகரித்துக் கொடுத்தவர்களுக்கும் யாழ். அரசாங்க அதிபரும் யாழ் மாவட்ட வெள்ள நிவாரண உதவி குழுவினரும் தங்கள் நன்றியைத் தெரிவித்துக் கொள் கிறார்கள்.

நிக்ஸன் நடவடிக்கை

# "பைத்தியகாரத்தனம்" செனட்டர் கென்னடி சாட்டை

மோஸ்டன், மே.3

அதிபர் நிக்ஸன் கம்போடியாசம்பந்தமாக எடுத்துள்ள நடவடிக்கைகள்''பைத்தியக் காரத்தனம்'' என்று செனட்டர் எட்வர்ட் கென்னடி வர்ணித்திருக்கின்றார்.

நாட்டுப்பற்று, நாட்டுப் பெருமை, கௌரவம் ஆகியவற்றின் பேரால் இந்த நடவடிக்கைகளை நியாயமானவை என்று நிலைநிறுத்த முயல்வது பைத்தியக்காரத்தனமும் இழிவான செயலுமாகும் என்றார் செனட்டர் கென்னடி நாம் மீண்டும்சண்டைக்குப் போகத்தொடங்கி விட்டோம் இதற்கு ஒரு முடிவே இல்லை போல் தோன்றுகுறது என்றார், செனட்டர் கென்னடி.

போஸ்டனில்இடம்பெற்ற ஒரு கூட்டத்தில்அவர் உரை நிகழ்த்துகையில் இந்தக்கருத்தை வெளியிட்டார்.

# இரசாயன - உயிரியல் ஆயுதங்களின் அபாயம்

## சுவீடிஷ் மக்கள் கவலை

ஸ்டொக்கோம், மே.3

இரசாயன, உயிரியல் ஆயுதங்களை உபயோகிப்பதில் அமெரிக்காவும், பிரிட்டனும் கொண்டிருக்கும்உறுதி குறித்து ஸ்வீடன் மக்கள் மத்தியில் பலத்த எதிர்ப்புத் தோன்றியிருக்கின்றது. ஸ்வீடிஷ் விஞ்ஞானிகளும் இந்த ஆயுதங்களின் அபாயம் குறித்து கருத்து வெளியிட்டிருக்கிறார்கள்.

உயிரியல் ஆயுதங்களை ஒழிப்பதற்கு ஐ.நா. ஸ்தாபனம் ஜெனிவா மாநாடு மூலம் எடுத்துவரும் முயற்சிகளுக்கு இந்த அமெரிகக பிரிட்டிஷ் போக்கு முரணாக விருப்பதாக சட்ட அடிப்படையிலும், இந்த ஆயுதப் பிரயோகங்களால் காலப்போக்கில் பெருத்த அழிவுகள் ஏற்படலாம் என்று விஞ்ஞான ரீதியில் எதிர்ப்புத் தெரிவிக்கப் படுகின்றது. இந்த ஆயுதப் பிரயோகங்கள் உடனடியாக மரணத்தைக் கொண்டுவராவிடினும் காலப்போக்கில் மனித உடல்களை எவ்வாறு பாதிக்கும் என்பதைப்பற்றி ஸ்வீடிஸ் விஞ்ஞானிகள் விளக்கம் கொடுத்திருக்கிறார்கள். எதிர் கால சந்ததியின் இந்த ஆயுதப் பிரயோகங்களால் எம்மாதிரி எதிர் விளைவுகளை அனுபவிப்பார்கள் என்பதை இப்பொழுது கூறுவது இயலாத காரியம என்று அவர்கள் கூறுகிறார்கள்

இந்த ஆயுதங்களைப் பிரயோகிப்பதன் மூலம், மக்கள் பட்டினியால் சாவதும், உணவில் விஷ சத்துக்கள் சேர்நது வயிற்று நோய்கள் ஏற்படுவதும், குழந்தைகளின் முதுகுகளிலும் கைகளின் பின்புறத்திலும் மயிர் முளைப்பதும் சர்வ சாதாரணம் என்றும், சிசு மரணங்களுக்கு இவை பெரிதும் காரணமாகின்றன வென்றும் விஞ்ஞானிகள் சுட்டிக் காட்டியுள்ளார்கள்.

## அமெரிக்க டாக்டர் விரிவுரை

மல்லாகம், ஞாயிறு

அமெரிக்க தகவல் நிலையத்தைச் சேர்ந்த சங்கீதத் துறை டைரக்டர் டாக்டர் டேயிரன் யாழ்ப்பாணம் வேம்படி மகளிர் கல்லூரி மண்டபத்தில் இம்மாதம் 5-ம் திகதி மாலை விரிவுரை நிகழ்த்துவார். இலங்கை அமெரிக்க கலாச்சார சங்கத்தினால் இச்சொற்பொழிவு ஒழுங்கு செய்யப்பட்டுள்ளது.

## தி. மு. க. எம். எல். ஏ. காலமானார்

சென்னை, மே. 3

சென்னை சட்டசபை தி. மு. க. உறுப்பினர் திரு வி. எஸ். மணி நேற்றுக் காலமானார். இவர் சிலகாலமாக நோய்வாய்ப்பட்டிருந்தார். இவருக்கு வயது 65. மதுரை ஆத்தூர் தொகுதி உறுப்பினராகத் தெரிவு செய்யப்பட்டவர். 1962ம் ஆண்டிலிருந்து சட்டசபை தி. மு. க. உறுப்பினராக இருந்து வந்தார்.

## 60 பேருடன் விமானம் கடலில் விழுந்தது

நியுயோர்க். மே 3

கென்னடி விமான நிலையத்திலிருந்து 60 பிரயாணிகளுடன் வேஜின் தீவை நோக்கிச் சென்றுகொண்டிருந்த அமெரிக்க விமானமொன்று சரிபியன் கடலில் விழுந்து நொறுங்கியது. இதில் சென்ற பிரயாணிகளில் 20பேரை காணவில்லை இவ்விடத்தில் தேடுதல் வேலைகள் நடைபெறுகின்றன. அங்கு அமெரிக்க விமானந்தாங்கிக் கப்பலொன்று விரைந்துகொண்டிருக்கிறது.

## பதவி உயர்வும் இடமாற்றமும்

கொடிகாமம், ஞாயிறு

உசன் இராமநாதன் மகா வித்தியாலயத்தில் ஆசிரியராகவிருந்த திரு அ. சிறீஸ்கந்தராசா பலாலி விசேட ஆசிரியகலாசாலைக்கு விரிவுரையாளராகப் பதவி உயர்வு பெற்றுச் சென்றுள்ளார் அனுராதபுரம் சென். ஜோசப் கல்லூரியிலிருந்து திரு. வே. பஞ்சாட்சரம் அவரது இடத்திற்கு மாற்றலாகியுள்ளார்.

நெய்வேலி சுரங்கத் தொழிலாளர்

## வன்முறைக் கும்பலமீது பொலிசார் சுட்டனர்

சென்னை, மே 3

தமிழ்நாடு நெய்வேலி நிலக்கரிச்சுரங்கத்தில் வேலை நிறுத்தம் நடைபெறுகின்றது. வேலைறுத்தக்காரர்கள் வன்முறையில் ஈடுபட்டதனால் நேற்றுப் பொலிஸார் துப்பாக்கிப்பிரயோகம்செய்தனர் இத்துப்பாக்கிப் பிரயோகத்தினால் யாராவது காயமடைந்தார்களா என்பது உடனடியாகத் தெரியவில்லை. இவ்விடத்தில் பொலிஸார் ரோந்து சுற்றிவருகின்றனர் என்ும், அதிகாரிகள் அங்கு முகாமிட்டிருப்பதாகவும், 500க்கு மேற்பட்ட பொலிஸார் காவல்செய்து வருவதாகவும் அறிவிக்கப்பட்டது. நிலைமை இன்று காலை கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வரப்பட்டுள்ளதாகவும் அறிவிக்கப்பட்டுள்ளது. கல்வீச்சில் பொலிஸார் பலர் காயமடைந்துள்ளனர்

இவ்வேலைநிறுத்தம் இரசாயனத் தொழிற்சாலைக்கும் பரவியிருப்பதாகத் தெரிகிறது. இவ்வேலைநிறுத்தத்தில் பெருந்தொகையான தொழிலாளர்கள் கலந்து கொண்டனர்.

அவர்களுக்கு நிர்ணயிக்கப்பட்ட கிராக்கிப் படிக்கு மேல் இப்பொழுது கிராக்கிப்படி கேட்கிறார்கள். அது மட்டுமல்லாமல் வேலைநிறுத்தம்செய்யும் தொழிலாளர் முன்னறிவித்தல் கொடுக்கவில்லை என்றும் அரசாங்க அறிக்கை கூறுகிறது.

இவ்வேலைநிறுத்தம் மின்சாரப்பகுதி போன்றவற்றிற்கும் பரவிவருவதாகத் தெரிகிறது.

## ஏ. பி. நாகராஜனுக்கு 'கலைக்கோவில்' பட்டம்

சென்னை, மே. 3

சிறந்த டைரக்டர் என்று டில்லி அரசினராலும், தமிழக அரசினராலும் பாராட்டப்பட்ட ஏ. பி. நாகராஜனுக்கு "இருபதாம் நூற்றாண்டுகலைக் குழுவினர்' 'கலைக்கோயில்' என்ற பட்டத்தை வழங்கினர். வெள்ளியினால் செய்யப்பட்ட விஜயலட்சுமி சிலையை அவருக்கு வழங்கிய கண்டாச்சிபுரம் சுப்பிரமணியம் சுவாமிகள் 'கலைக்கோவில்' என்ற பட்டத்தை சூட்டினார்விழுப்புரம் அருகில் உள்ள திருக்கோயிலூரில் நடைபெற்ற நாடக மொன்றின் போதே இப்பட்டமளிப்பு நடைபெற்றது.

## சீனாவின் விண்வெளி திட்டங்கள்

டோக்கியோ, மே 3

அண்மையில் தன் முதல் விண்வெளி செயற்கைக் கோளை செலுத்தியதை அடுத்து வேறு விஞ்ஞான சாதனைகளைத் தான் விரைவில் அறிவிக்கக்கூடுமென சீனா மறைமுகமாகக் கூறியது.

ஆனால் சீனர் மனதில் என்ன இருக்கிறது என்பதை நவசீன செய்தி ஸ்தாபனம் கூறவில்லை.

## திறப்புக்கோர்வை யாருடையது?

பேர்சுடன் கூடிய திறப்புக் கோர்வை ஒன்று சுண்டுக்குளி, பழைய பூங்கா வீதியில்வசிக்கும் திரு. இராசேந்திரம் என்பவரால் ஈச்சமோட்டை புதுறேட் சந்தியில் கண்டெடுக்கப்பெற்று 'ஈழநாடு' காரியாலயத்தில் ஒப்படைக்கப் பட்டுள்ளது உரியவர் அலுவலக நேரத்தில் அத்தாட்சிகாட்டி பெற்றுக்கொள்ளலாம்.

## கந்தமுருகேசனுருக்கு சிலை நிறுவ முயற்சி

பருத்தித்துறை, ஞாயிறு

தமிழ் வளர்த்த கந்த முருகேசனுருக்கு மந்திகைச்சந்திக்கு அண்மையில் ஒரு சிலை நாட்டும்முயற்சியில் அவரது மாணவர்கள் தீவிரமாக ஈடுபட்டுவருகின்றனர். இடைக்காலத்திலேற்பட்ட நோய் காரணமாகக்கால்கை முடங்கியபோதும் தொடர்ந்து தமிழ்மொழி வளர்ச்சியிலீடுபட்டு பல பண்டிதர்களையும், புலவர்களையும் உருவாக்கிய பெரியார் கந்த முருகேசனார் தென்புலோலியைச் சேர்ந்தவர். வடபகுதி கீழைத்தேச மொழிச்சங்கம் நடாத்தி வந்த பண்டிதர் பால பண்டிதர், சைவப்புலவர் பரீட்சைகளில் மாணவரை உருவாக்கியதுமட்டுமன்றி மேற்படி சங்கப் பரீட்சாதிகாரிகளுள்ஒருவராகவும் இறக்கும் வரை கடமையாற்றிவந்தவரென்பது குறிப்பிடத்தக்கது

சிலைத் திறப்பு விழாவின் போது கந்த முருகேசனார் ஆக்கிய 'நாவலன் கோவை' என்னும் நாலும்வெளியிடப் படவிருப்பதாகத்தெரிகிறது நல்லை நகர்தந்த ஆறுமுக நாவலர் பற்றிய இந்நூல், இலக்கியச் சுவையும் கவிதை நயமும் செறிந்த படைப்பெனக் கூறப்படுகிறது.

ஆனிமாத இறுதியில் சிலை நாட்டு வைபவம் நடைபெறலாமெனத் தெரிகிறது.

இளைஞருககு

## கிராம முன்னேற்றத்தில் பயிற்சியளிக்கத்திட்டம்

முசலி, ஞாயிறு

இவ்வருடம் ஜூன் 5-ந் திகதி தொடக்கம் அச்சுவேலி கிராமமுன்னேற்றப் பயிற்சிப் பாடசாலையில் கிராமமுன்னேற்றச் சங்க இளைஞர்களுக்கு ஒரு பயிற்சி வகுப்பு நடைபெறவிருக்கிறது. ஒரு வாரத்திற்கு இப்பயிற்சி வகுப்பு நடைபெறும்.

இதற்கான ஆயத்தங்களை யாழ்ப்பாணம், மன்னார், வவனியா மாவட்டக் கச்சேரிகள் செய்துவருகின்றன. ஒவ்வொரு கச்சேரிப் பிரிவிலிருந்தும் கிட்டத்தட்ட ஆறு இளைஞர்கள் பயிற்சிக்கு அழைக்கப்படுவார்கள் எனத் தெரிகிறது

## மே மாத சம்பளம் 17-ல் கிடைக்கும்

கோட்டை, ஞாயிறு

இம்மாதச் சம்பளம் அரசாங்க ஊழியர்களுக்கு இம்முறை 17-ம் திகதி வழங்கப்படவிருக்கிறது. அரசாங்கம் எதிர்வரும் பொதுத்தேர்தலை முன்னிட்டு இந்த ஒழுங்கைச் செய்துள்ளது

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மணிவாக்கு

மிகமிகச் சொற்பமான விஷயங்களைப் பற்றி மிக மிக அதிகமாக அறிந்துகொள்கிறவனே நிபுணன் ஆகிறான்.

—நிகலஸ் எம்பட்லர்.


# ஈழநாடு

Eelanadu National Tamil Daily
Telegrams "EELANADU" Jaffna.
Post Box 49, Jaffna. Telephone 389.

யாழ்ப்பாணம் சாதாரண வருஷம் சித்திரை மாதம் 21-ந் திகதி (4-5-70)


## சீனாவின் சக்தி

சில தினங்களுக்கு முன்னர் நவசீனா ஒரு செயற்கைக் கிரகத்தை விண்வெளிக்கு அனுப்பியதை அறிந்த வல்லரசுகளும் மற்றும் சில நாடுகளும் அதிர்ச்சியடைந்திருப்பதாகச் செய்திகள் கூறுகின்றன. வல்லரசுகளோ மற்றும் அரசுகளோ சீனாவைக் கண்டு அஞ்ச வேண்டியது அவசியம் தானா?

உலகில் அதிக மக்கள் வாழுகின்ற நாடு சீனா. அமெரிக்காவும் வேறுசில நாடுகளும் அதனை அங்கீகரிக்க மறுத்துவருகின்ற போதிலும், உலக மன்றமாகிய ஐ. நா. சபையில் அதற்குப் பிரதிநிதித்துவமளிக்க அமெரிக்காவும் அதனைச் சார்ந்துள்ள நாடுகளும் முட்டுக்கட்டையாக இருந்துவரினும் சீனாவின் வளர்ச்சியைத் தடுக்கமுடியவில்லை; அதனை மறுக்கவும் முடியாது.

அமெரிக்காவும் சோவியத் யூனியனும் அணு ஆயுதங்களை உற்பத்திசெய்து பல நாடுகள் ஆட்சேபித்தும் அதற்குச் செவிசாய்க்காது அந்தக் குண்டுகளைப் பரீட்சித்துப் பார்த்து அவற்றைக் குவித்துவைத்திருக்கின்றன. பிரான்சும் சீனாவும் அணு ஆயுத உற்பத்தியில் ஈடுபட முனைந்த சமயத்தில் ஓரளவு அணுஆயுத பரீட்சைத் தடை ஒப்பந்தம் ஒன்றை அமெரிக்காவும் சோவியத்யூனியனும் சேர்ந்து உருவாக்கின. உலகநாடுகள் பலவும் இந்த ஒப்பந்தத்தில் கைச்சாத்திட்டன ஆனால் அணு ஆயுத உற்பத்தியில் அமெரிக்காவும் சோவியத்யூனியனும்தான் ஏகபோக உரிமை உடையவைகளா என்ற கேள்வியுடன் அந்த ஒப்பந்தத்தில் கைச்சாத்திடுவதற்குப் பிரான்சும் சீனாவும் மறுத்துவிட்டன. இதன்பின் அணு ஆயுத பரவல் தடை ஒப்பந்தம் ஒன்றைச் செய்து அணுஆயுத பரீட்சைகளை நிறுத்தவும் அணுஆயுத பரவலைத் தடுக்கவும் உண்மையிலேயே அமெரிக்காவுக்கும் சோவியத் யூனியனுக்கும் விருப்பம் இருக்குமானால் தாங்கள் இதுவரை உற்பத்திசெய்து குவித்துவைத்துள்ள அணுஆயுதங்களை அழித்துவிடவேண்டும் அல்லது அவைகள் அனைத்தையும் ஐ. நா. விடம் ஒப்படைத்துவிடவேண்டும் இதுதவிர புதிதாக அணுஆயுதங்களை உற்பத்தி செய்யாமலிருக்க வேண்டும். இதில் எதையும் செய்வதற்கு அமெரிக்காவோ சோவியத்யூனியனோ தயாராக இல்லை.

இந்நிலையில் சீனா அணுகுண்டு உற்பத்தி செய்வதையும், செயற்கைக் கிரகத்தை விண்வெளிக்கு அனுப்பியிருப்பதையும் கண்டு அச்சமும் அதிர்ச்சியுமடையவேண்டிய அவசியமென்ன? ஆசிய நாடுகள் எதற்கும் தங்களையே எதிர்பார்த்திருக்க வேண்டுமென்று இந்த வல்லரசுகள் இனியும் கனவு காண்பது நல்லதல்ல.

ஆசிய நாடுகளுக்குள்ளேயே ஜனத்தொகையிலும் சக்தியிலும் முன்னேறிவரும் நாடு நவசீனா. அதனைப் பகைநாடாகக் கொள்ளாமல் அதனை அங்கீகரித்து, அதனையும் ஐ. நா. வில் ஓர் அங்கத்துவ நாடாக ஏற்றுக்கொள்வதன் மூலமே அதனைக் கட்டுப்படுத்தலாம் என்பதை வல்லரசுகள் நினைவில் கொள்வது நல்லது.

சீனாவின் செயற்கைக் கிரகத்தையும் அணுஆயுத உற்பத்தியையும் கண்டு இந்தியாவிலுள்ள சிலர் அபாயச்சங்கு ஊதுகின்றனர்; வேறு சில ஆசிய நாடுகளும் அச்சம் தெரிவித்துள்ளன. இது தேவையற்ற தன்னம்பிக்கையில்லாத பீதி.

சீனாவை என்றும் பகை

# காந்திஜி விரும்பிய சுயாட்சி முறை

## அமைப்பதற்கு இவர் முயலுவாராம்

உடுவில் ஞாயிறு

இன்று நடைமுறையிலுள்ள ஆட்சியமைப்பும் அவற்றின் கீழ் இயங்கும் அரசியல் கட்சிகளும் ஜனநாயகம் என்றபோர்வையில் மக்களை ஏமாற்றும் போலி அமைப்புகளாகவே இருக்கின்றன. அவற்றின் ஆதிக்கத்தை நீக்கி, உண்மையான மக்களாட்சி நாட்டில் நிலவவேண்டுமானால் ஒவ்வொரு கிராமம் நகரம், வட்டாரம் தோறும் மக்கள் பங்கெடுத்துக் கொள்ளும் ஆட்சி முறையும், சமூக பொருளாதார அபிவிருத்தியும் சமதுவமும் ஏற்படவேண்டும், அவற்றின்மூலமே நசுக்கப்பட்ட எல்லாமக்களினது உரிமைகளையும் மீட்க முடியும். இந்தமுறை வலுப்பெற்றால் மத்தியஒற்றையாட்சி அமைப்பையும் மாற்றியமைக்கமுடியும்.

உடுவில் தொகுதியின் வாலிபமுன்னணி சுயேட்சை அபேட்சகர் திரு. குமாரசாமி விநோதன் நவாலியில் நடைபெற்ற தமது தேர்தல் பிரசாரக் கூட்டத்தில் தனது கொள்கைத் திட்டங்களை விளக்கிக் கூறுகையில் மேற்கண்டவாறு கூறினார்.

கிராம அபிருத்தி பொருளாதாரம் சமூகம், மொழி, கல்வி போன்ற துறைகளில் தான் மேற்கொள்ளவிருக்கும் பணிகளை அவர் எடுத்துக் கூறினார்.

தமது திட்டத்தின் மூலம் இன்றைய இலங்கையின் ஆட்சிமுறையை மாற்றி காந்திஜிவிரும்பிய கிராம நகர சுயாட்சிமுறையை அமைக்க முயற்சிக்கப்படும் என அவர் சொன்னார்.

கூட்டத்தில் திருவாளர்கள் எஸ். சுதர், தா. சண்முகநாதன், கே. பலசுப்பிரமணியம் ஆகியோரும் பேசினர்.

# 'வடக்கிலும் கிழக்கிலும் தமிழரே ஆட்சி செலுத்துவர்'

— ஆர். ஜி.

மூதூர், சனி

"கச்சேரி முறையை ஒழித்து அதற்குப் பதிலாக மாவட்ட மக்கள் குழுக்கள் நிறுவுவதாக திருமதி பண்டாரநாயக்கா கூறுகிறார். இவ்வாறு ஏற்படுமானால் வடக்கு, கிழக்கு மாகாணங்களுக்கு என்ன நடக்கும்? இரண்டும் தமிழர் ஆட்சிக்கு உட்பட்டுவிடும்."

திருகோணமலை மாவட்டத்தில் நடைபெற்ற தனது கட்சியின் பிரசாரக்கூட்டத்தில் உரையாற்றிய திரு. ஆர். ஜி. சேனநாயக்கா மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

அவர் மேலும் தொடர்ந்து பேசுகையில், "மக்கள் குழுக்கள் நிறுவப்பட்டால் திருகோணமலை ஸ்திரமான தமிழ்ப் பகுதியாகிவிடும். சிங்கள மக்கள் இங்கிருந்து வெளியேறவேண்டி நேரிடும். பின்னர் ஐக்கியதேசியக்கட்சி கொண்டுவந்த மாவட்டசபை மசோதாவின் நோக்கமும் தானாகவே நிறைவேறிவிடும். திருக்கோணமலையில் வாழும் மக்[illegible] தமிழ். ஆங்கிலம் ஆகிய இரு மொழிகளில் மாத்திரமே எழுதப்பட்டுள்ளன.

நான் திருகோணமலையில் சிங்களக் குடியேற்றத்தை ஏற்படுத்தப் பலதடவை முயன்றேன். ஆனால் இங்குள்ள தமிழர்கள் அதை எதிர்ப்பதோடு தடையாகவுமுள்ளனர். எனக்கு அதிகாரம் கிடைத்தால் தமிழர் அதிகாரத்தை இப்பகுதியிலிருந்து பூண்டோடு ஒழித்துவிடுவேன்" எனக் கூறினார்.

இக்கூட்டத்தில் உரையாற்றிய திரு ஒபயசேகரா மாபா பேசுகையில், அரசகருமமொழிச் சட்டம் சரியான முறையில் செயல்படுத்தப்படவில்லைஎன்பதை இங்குள்ள பெயர்ப் பலகைகள் தெளிவாகக் காட்டுகின்றன எனக் கூறினார்.

திரு. பி. வி. குணதிலகா உட்படப் பலர் உரையாற்றினர். ......

## உபநயனம்

யாழ்ப்பாணம் [illegible]

வேதாகம விற்பன்னரா[illegible]

# "சாதிக் கொடுமையை அகற்றியே தீருவோம்"

— மு. ஆலாலசுந்தரம்

கிளிநொச்சி, ஞாயிறு

"பொதுத் தேர்தலின் வெற்றியை மனதில்வைத்து உள்ளொன்றும் வெளியொன்றுமாக நாம் பேசத் தயாராகயில்லை. சாதிக் கொடுமை அகலவேண்டும்; அகற்றியேதீருவோம். அதற்காக இலங்கைத் தமிழரசுக் கட்சி போராடியே தீரும்" என கிளிநொச்சித் தொகுதி தமிழரசு வேட்பாளர் திரு. மு. ஆலாலசுந்தரம் கிராஞ்சியில் பேசும்போது குறிப்பிட்டார். கூட்டத்துக்கு திரு. பரமானந்தம் தலைமை வகித்தார்.

மாவிட்டபுரத்து வழக்குகள் அனைத்தும் தாழ்த்தப்பட்ட மக்களுக்காக தமிழரசுக்கட்சி நடத்தியது. எத்தனை கோவில் வழக்குகளை நானே முன்நின்று நடத்தினேன். மற்றத் தமிழ்க்கட்சி வழக்கறிஞர் இவ்வழக்குகளில் ஒன்றையேனும் நடத்த முன்வந்தாரா?" என திரு. ஆலாலசுந்தரம் கேட்டார்

# தமிழரசுக்கட்சி பெரும் பலத்துடன்செல்ல வேண்டும்

— வி. தர்மலிங்கம்

உடுவில், ஞாயிறு

"ஆட்சிமன்றத்திற்கு சென்ற காலம்முதல் இளைஞர்களின் நலனில் விசேட கவனம் செலுத்தியுள்ளேன். குறிப்பாக ஏழைகளுக்கும் தமிழர் சிறுபான்மை இனத்தவர்க்கும் என்னால் முடிந்த பல உதவிகளைச் செய்துள்ளேன். அத்துடன் எமது இனம் சகல உரிமைகளும் பெற்று வாழவேண்டுமானால் தமிழரசுக்கட்சி பெரும்பாலான பிரதிநிதிகளுடன் ஆட்சிமன்றம் செல்லவேண்டும்."

உடுவிலில் நடைபெற்ற இளைஞர் கருத்தரங்கமொன்றில் பேசிய தமிழரசுககட்சி உடுவில் வேட்பாளர் திரு. வி. தர்மலிங்கம் மேற்கண்டவாறு கூறினார்.

அவர் தொடர்ந்து பேசியதாவது:-

1961-ம் ஆண்டில் எமது கட்சி சத்தியாக்கிரகப் போராட்டம் நடத்தியிராவிட்டால் இன்று வடக்கு கிழக்கு மாகாணங்களிலும், சிங்களம்தான் உத்தியோக மொழியாக இருந்திருக்கும். வடக்கு கிழக்கு மாகாணங்களில் சிங்கள மொழியுடன் தமிழும் சமமாகவே இன்று நடைமுறையில் கொள்ளப்படுவதற்கு வழிகோலியது தமிழரசுக்கட்சிதான். தமிழ் இளைஞர்களாகிய நீங்கள் இதனை நன்குணர வேண்டும். சாதி இனமத வேறுபாடின்றி தமிழினத்தின் விடுதலைக்காக தொடர்ந்து போராடிவரும் எமது கட்சிக்காக நீங்கள் வாக்களிக்க வேண்டும்."

......

## இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபனம்

### திங்கள் 4—5—70

(செய்திகள்: காலை 6-45, பகல் 12-45, மாலை 6-00, இரவு 9-00)

344 மீ. அன்ட் 61 மீ.

காலை 6-15 நாதாஞ்சலி, 6-25 சைவநற்சிந்தனை, 6-30 கத்தோலிக்க நற்சிந்தனை, 6-35 துதிப்பாடல்கள், 7-15 மெல்லிசை, 7-45 திரைகானம், 8-00 செய்திச்சுருக்கம், 8-03 நிலைய ஒலிப்பதிவுகள், 8-15 இஸ்லாமியகீதங்கள், 8-30 செய்திச்சுருக்கம்.

344 மீ. அன்ட் 49 மீ.

பகல் 12-00 செய்திச் சுருக்கம், 12-03 சித்திர கானம், 1-00 அரங்கேற்றம், 1-30 செய்திச்சுருக்கம்.

## நிறைவேறாத வாக்குறுதிகள்

பெல்மதுளை, ஞாயிறு

'கூட்டணியினர் இருகொத்து அரிசியல்ல பத்துக் கொத்து அரிசி தருவோம் என்று வாக்களித்தாற்கூட நான் ஆச்சரியப்படமாட்டேன், அவர்கள் அளிக்கும் வாக்குறுதிகளை அவர்கள் நிறைவேற்றுவதேஇல்லை. அவர்களுடைய நோக்கம் கடுமையான ஆட்சியை உருவாக்குவதே தவிர மக்களுக்குக் கொடுத்த வாக்குறுதிகளை நடைமுறைப்படுத்துவதல்ல என்று பிரதமர் டட்லி சேனநாயக்கா கூறினார்.

# தேர்தல் போட்டி - 1970

இலங்கையில் 7-வது ஆட்சி மன்றத்தின் பிரதிநிதிகளைத் தெரிவுசெய்வதற்கான பொதுத்தேர்தல் இம்மாதம் 27-ம் திகதியன்று நடைபெறவிருப்பது வாசகர்கள் அறிந்ததே. அதையொட்டி 'ஈழநாடு' ஒரு போட்டி நடாத்த ஏற்பாடு செய்திருக்கின்றது. அரசியற் கட்சிகளும் சுயேச்சை வேட்பாளர்களும் பெறும் ஆசனங்களைச் சரியாகக் குறிப்பிடும் வாசகருக்கு முதலாம் பரிசும் ஏறத்தாழ சரியான விடையனுப்பும் வாசகருக்கு 2-ம் பரிசும் அதற்கடுத்த படியான சரியான விடைக்கு 3-ம் பரிசும் வழங்கப்படும்.

போட்டியில் பங்குபற்ற விரும்புகின்றவர்கள் எதிர்வரும் பொதுத்தேர்தலில் போட்டியிடும் அரசியல் கட்சிகளும் சுயேச்சை வேட்பாளர்களும் பெறும் ஆசனங்களை இங்கே பிரசுரமாகும் கூப்பனில் உரிய இடத்தில் எழுதி "தேர்தல் போட்டி - 1970" ஈழநாடு, யாழ்ப்பாணம் என்ற விலாசத்திற்கு 26-5-70 க்குப் பிந்தாமல் எமக்குக் கிடைக்கக்கூடியதாக அனுப்பிவைக்கவேண்டும். குறித்த திகதிக்குப் பிந்திய கூப்பன்கள் எக்காரணங்களைக் கொண்டும் ஏற்றுக்கொள்ளப்படமாட்டா.

ஒருவர் எத்தனை கூப்பன் வேண்டுமானாலும் அனுப்பலாம். நேரே கொடுக்க விரும்புவோர் "ஈழநாடு" அலுவலகத் தபால் பெட்டியில் சேர்க்கவும்.

கேள்விகள்:

1. இலங்கைத் தமிழரசுக் கட்சிக்கு வடக்கு -கிழக்கு மாகாணங்களில் எத்தனை தொகுதிகளில் வெற்றி கிடைக்கும்.

2. அகில இலங்கைத்தமிழ் காங்கிரஸ் கட்சிக்கு வடக்கு கிழக்கு மாகாணங்களில் எத்தனை தொகுதிகளில் வெற்றி கிடைக்கும்.

3. ஐக்கிய தேசியக் கட்சிக்கு வடக்கு — கிழக்கு மாகாணங்களில் எத்தனை தொகுதிகளில் வெற்றி கிடைக்கும்.

4. கூட்டணிக்கட்சிக்கு வடக்கு - கிழக்கு மாகாணங்களில் எத்தனை தொகுதிகளில் வெற்றி கிடைக்கும்.

கூட்டணிக் கட்சியுள் அடங்குவன:

ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சி, இலங்கை கம்யூனிஸ்ட் கட்சி (மாஸ்கோ-பீக்கிங்), லங்கா சமசமாஜக் கட்சி என்பன.

5. சுயேட்சையாளர்களுக்கு வடக்கு-கிழக்கு மாகாணங்களில் எத்தனை தொகுதிகளில் வெற்றி கிடைக்கும்.

சுயேச்சைகளுள் அடங்குவன:

தமிழர் சுயாட்சிக் கழகம், இலங்கைத்தமிழர் ஒற்றுமை முன்னணி, சிங்கள மகாஜனக் கட்சி, இ. தி. மு. க. கட்சி என்பன.

• பரிசு விபரங்கள் விரைவில் வெளிவரும்

'ஈழநாடு' ஆசிரியர் தீர்ப்பே முடிவானது.

### 1970 தேர்தல் போட்டிக் "கூப்பன்"

'ஈழநாடு'

| | |
|---|---|
| இ. த. அ. கட்சி | |
| அ. இ. த. கா. கட்சி | |
| ஐ தே. கட்சி | |
| கூ. கட்சி | |
| சுயேச்சை | |

# செய்யுங் தொழிலைப் போற்றி

Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

கேள்வியுடன் அந்த ஒப்பந்தத்தில் கைச்சாத்திடுவதற்குப் பிரான்சும் சீனுவும் மறுத்துவிட்டன. இதன்பின் அணு ஆயுத பரவல் தடை ஒப்பந்தம் ஒன்றைச் செய்து கொள்வதற்கும் சோவித் யூனியனும் அமெரிக்காவும் ஒன்று சேர்ந்து முயற்சி மேற்கொண்டன. இதற்கும் பிரான்சும் சீனுவும் மட்டுமல்ல இந்தியா போன்ற மற்றும் மல நாடுகளும் ஆதரவுகொடுக்க மறுத்துவிட்டன.

னர்; வேறு சில ஆசிய நாடுகளும் அச்சம் தெரிவித்துள்ளன. இது தேவையற்ற தன்னம்பிக்கையில்லாத பீதி.

சீனுவை என்றும் பகைவர்களாகவே ஏன் கருதிக்கொண்டிருக்க வேண்டும்? அதனுடன் பேச்சுவார்த்தை நடத்தி நட்புறவுடன் வாழ்ந்தால் ஆசியநாடுகளின ஒற்றுமையையும் சக்தியையும் கண்டு அந்நிய வல்லரசுகள் இங்கு வாலாட்ட அஞ்சும் என நம்பலாம்.

டும். பின்னர் ஐக்கியதேசியக்கட்சி கொண்டுவந்த மாவட்டசபை மசோதாவின் நோக்கமும் தானகவே நிறைவேறிவிடும். திருக்கோணமலையில் வாழும் மக்களில் 50 வீதத்தினர் சிங்களவராக இருந்தும் உள்ளூராட்சிமன்றங்களில் சிங்களவருக்கு இடமில்லை. கொழும்பு போன்ற நகரங்களில் வீதிகள், காரியாலயங்களின் பெயர்கள் எல்லாம் மூன்று மொழிகளில் எழுதப்பட்டுள்ளன. திருகோணமலையில்

உட்படப் பலர் உரையாற்றினர். ......

## உபநயனம்

யாழ்ப்பாணம், திங்கள்

வேதாகம விற்பன்னராகிய காலஞ்சென்றபிரம்மஸ்ரீ ஏ. பஞ்சநாதேஸ்வரக் குருக்களின் பௌத்திரனும், ஏ. ப சர்வேஸ்வரக் குருக்களின் கனிஷ்ட புத்திரனுமாகிய செல்வன் ஏரம்பநாதனுக்கும், சதானந்த சர்மாவின் ஜேஷ்ட புத்திரனுகிய செல்வன் ஸ்ரீதரனுக்கும் கடந்த வெள்ளிக்கிழமை உபநயனச் சடங்கு நடைபெற்றது. தொடர்ந்து நான்கு நாட்கள் சமிதாதான ஔபாசன கிரியா வைபவம் நடைபெறுகின்றன. நான்காவது நாளாகிய இன்று செண்டுகட்டுதல் கிரியா வைபவம் இடம் பெறும்.

344 மீ. அன்ட் 49 மீ.

பகல் 12-00 செய்திச்சுருக்கம், 12-03 சித்திரகானம், 1-00 அரங்கேற்றம், 1-30 செய்திச்சுருக்கம்.

344 மீ. அன்ட் 61 மீ.

மாலை 4-25 செய்திச்சுருக்கம், 4-28 கல்வி ஒலிபரப்பு, 5-00 செய்திச்சுருக்கம், 5-03 பிறந்த தின வாழ்த்துக்கள், 5-30 ஓடிவிளையாடுபாப்பா.

இரவு 6-15 இசைப்பயிற்சி, 6-30 கிராமசஞ்சிகை, 7-00 செய்திச்சுருக்கம், 7-03 கிராமசஞ்சிகை, 7-15 பாட்டு, 7-45 பேச்சு, 8-00 செய்திச்சுருக்கம், 8-03 முஸ்லிம்நிகழ்ச்சி, 9-30 நாடகம், 10-00 நேயர்கேட்டவை, 10-30 செய்திச்சுருக்கம்.

யான ஆட்சியை உருவாக்குவதே தவிர மக்களுக்குக் கொடுத்த வாக்குறுதிகளை நடைமுறைப்படுத்துவதல்ல என்று பிரதமர் டட்லி சேனநாயக்கா கூறினர்.

பெல்மதுளைத் தொகுதியிலுள்ள லெலோப்பிட்டியா என்னுமிடத்தில் ஐ. தே. கட்சி வேட்பாளர் திரு. பியதாச. பாலேந்தகமவை ஆதரித்து நடைபெற்றஅக்கூட்டத்தில்பிரதமர் பேசினர்.

பிரதமர் திரு டட்லி சேனநயாக்கா பெல்மதுளை, இரத்தினபுரி, அவிசாவளை ஆகிய இடங்களில் சுற்றுப்பிரயாணம் செய்துவிட்டு, கொலன்னுவைத் தொகுதியிலுள்ள கொட்டிகாவத்தை என்னும் இடத்தில் நடந்த மாபெரும் கூட்டத்தில்பேசுகையில் மக்கள் என்னவாக்குறுதிகளைத்தரப் போகிறீர்கள் என்று கேட்கப் போவதோ கூட்டணியினர் வெளியேற்றப்பட்டபின்ஒரு தேர்தல் வேண்டுமா என்று கேட்கப் போவதோ இல்லை. முக்கூட்டுபொதுவுடைமைக் அழைத்துச் செல்லும்என்று திரு. கெனமனுல் சொல்ல முடியுமா என்று அவர் மேலும் கேட்டார்.

1965 ஆம் ஆண்டு ஜனநாயகத்தைக் காப்பாற்றியவர்களைத்தெரிவதேமக்களுடைய கடமை. திரு. பிலிப் குணவர்த்தனுவும் பிரதமரும் சட்டசபையில் 1936ம் ஆண்டிலிருந்து அரசியலில் ஈடுபட்டு வருவதாகவும், தன்னுடன் டெடிகமைத் தொகுதியில் போட்டியிடுபவர் அந்த ஆண்டில் பிறந்தபடியாற்ருன், திருமதி பண்டாரநாயக்காதன்னை வயோதிபர் விடுதிக்கு அனுப்ப வேண்டுமென்று கூறுகிறர் எனப் பலத்த கரகோஷத்துக்கிடையே சொன்னர்.

| சுயேச்சை | |
|---|---|

# செய்யுந் தொழிலைப் போற்றி விழாக்கொண்டாட வேண்டும்

முசலி, ஞாயிறு

'ஒரு மனிதன் பிறககும் போது அவன் என்ன தொழில் செய்வானென்று அவன் தலையில் இறைவன் எழுதியதில்லை. அவன் பிறந்த இடம், சூழல் என்பவற்றைக் கொண்டே, அவனுடைய தொழில் அமைந்து விடுகின்றது.

உலகத்தின் அஞ்ஞான இருளைப் போக்கி மெஞ்ஞான ஒளியைக் கொடுத்த யேசுக் கிறிஸ்துவை வளர்த்த புனித சூசையப்பர் ஒரு தச்சன். இதனுலேயே, யேசுக் கிறிஸ்து தனது இளமைப் பராயத்தில் தச்சுத் தொழிலையேசெய்தார். உலக இரட்சகர் யேசுக் கிறிஸ்து தனது இளமைப் பராயத்தில் தச்சுத் தொழில் செய்தாரென்ருல், நாமெல்லோரும் நாம் செய்கின்ற தொழிலை மேன்மைப் படுத்தி ஏன் விழாக் கொண்டாடக் கூடாது'.

முத்தரிப்புத்துறை புனித சூசையப்பர் சனசமூக நிலையம் கொண்டாடிய வருடாந்த விழாவின் போது முசலிக் காரியாதிகாரி திரு வை. சொக்கலிங்கம் மேற்கண்டவாறு கூறினர்.

விழா முத்தரிப்புத்துறை கடலணை மைதானத்தில் நடைபெற்றது. விழாவுக்கு நியாயதுரந்தரர் ரி. எஸ் குரூஸ் தலைமை வகித்தார். வண ரி மகேந்திரன் ராஜநாயகம், முசலிக்காரியாதிகாரி பிரிவுக் கிராம அபிவிருத்தி உத்தியோகஸ்தர் திரு கே சுப்பையாபிள்ளை, தலைமையாசிரியர் திரு நே சூசை மொருய்ஸ் ஆகியோரும் உரையாற்றினர். விழாவையொட்டி நானுவித விளையாட்டுப் போட்டிகளும், 'மீனவர் வாழ்க்கை' என்னும் வில்லுப்பாட்டும், 'ஒரு துளி', தியாக சுடர்' என்னும் நாடகங்களும் இடம் பெற்றன.

கழகத் தலைவர் ஆசிரியர் வி எம் பெரேரா நன்றி தெரிவித்துப் பேசினர்.

# 'தற்போதய அரசியல் சாசனத்தை தகர்க்கவேண்டும்'

### பருத்தித்துறையில் இ. தி. மு. க. வேட்பாளர் உரை

வல்வெட்டித்துறை, ஞாயிறு

''பாட்டாளிக்கும், தொழிலாளிக்கும், விவசாயிக்குமாகப் பாடுபட தென்அகத்தில் உருவாகிய தி. மு. கழகத்தின் இலட்சியத்தையும் அதுனுல் விளைந்த அரசியல் இலக்கையும் இந்நாட்டிலும் உருவாக்கி இந்தநாட்டிலிருக்கின்ற பாட்டாளிகள் தொழிலாளிகள் விதசாயிகளின் விடிவுக்காக வழிதேட இ. தி.மு. க. இந்நாட்டின் ஆட்சிமன்ற தேர்தலில் இம்முறை போட்டியிட முன் வந்துள்ளது''

இ. தி. மு. கழக பொதுச் செயலாளரும், பருத்தித்துறை இ. தி. மு. க. வேட்பாளருமான திரு. பூ. ஆ. விசாகரத்தினம் பருத்தித்துறை கடற்கரை மைதானத்தில் நடைபெற்ற மே தின விழாவுக்குத் தலைமை தாங்கிப் பேசுகையில் மேற்கண்டவாறு கூறினர்,

திரு. விசாகரத்தினம் தொடர்ந்து பேசுகையில் கூறியதாவது:

தற்பொழுது இந் நாட்டில் அமைந்திருக்கின்ற ஏகாதிபத்திய சாசனம், அதன் சட்டங்கள் அமுல் இருக்கும் வரை உழைப்பவர்களுக்கோ உழவர்களுக்கோ, தொழிலாளர்களுக்கோ, மற்றும் சிறுபான்மை இனத்துக்கோ விடிவையோ, நல்வாழ்வையோ காணமுடியாதென்று இ. தி. மு. க. உணர்கிறது. ஆகவே இப்போது இலங்கையில் இருக்கும் சாசனத்தை தகர்ப்பதற்கும் அந்த இடத்தில் ஒரு தகுதியான ஒரு சமவுரிமைக்குடியரசை நிறுவக்கூடிய அரசியல் அமைப்பை ஏற்படுத்துவதற்கு புரட்சி சோசலிஷ உணர்வு கொண்டு தொழிலாளர் அணியொன்றை திரட்டுவதற்கு இ. தி. மு. கவுடன் ஒத்துழைக்கவேண்டும் இதுவரைகாலமும் தமிழினத்தை வழிநடத்திவந்த தமிழ்க்கட்சிகளான தமிழ்க் காங்கிரசோ, தமிழரசுகட்சியோ ஏகாதிபத்தியத்தின் அடிவருடிகளாக, அவர்கள் ஆட்டுகின்ற ஆட்டத்திற்கெல்லாம் தலைஆட்டி, தமிழினத்தையும், அதன் தொழிலாளர்கள், பாட்டாளிகள் விவசாயிகள் மத்தியிலும் பிரிவினைகளை உருவாக்கி காட்டிக்கொடுத்து தமிழினத்தை ஓர் ஆட்டங்காணும் நிலைக்கு கொண்டுவந்து விட்டனர்.

திரு. ஏ. இளஞ்செழியன் திரு, உ. நெடுமாறன், திரு சி திராவிடமணி ஆகியோரும் பேசினர்.

— —

## தபால் தந்தி ஊழியரின் லெனின் விழா

வெள்ளவத்தை, ஞாயிறு

இலங்கை தபால்தந்திப் போக்குவரத்துத் திணைக்களப் பொழுதுபோக்குக் கழகத்தினர் லெனின் நூருவது ஆண்டு நினைவுவிழா வொன்றினை மிகவும் சிறப்பான முறையில் பார்சன் வீதியிலுள்ள அரசாங்க சேவை லிகிதர் சங்கக் கட்டிடத்தில் கொண்டாடினர்.

'லெனின் இன் ஒகடோபர்' என்ற ஆங்கில விளக்கம் கொடுக்கப்பட்டதிரைப் படமும் காண்பிக்கப்பட்டது.

## தற்கொலை

யாழ்ப்பாணம், திங்கள்

யாழ்ப்பாணம்சிவன்கோவிலடியைச்சேர்ந்த ந.இ. முருகானந்தம் (வயது30) நச்சுத் திராவகம் அருந்தித்தற்கொலை செய்துகொண்டார். அளவெட்டியிலுள்ள இவரது மனைவிவீட்டுக்கு கடந்த 28ம் திகதி சென்றிருந்த முருகானந்தம் நேற்று முன் தினம் தமது வீடுதிரும்பியதாகவும், சுகவீனம் என்று படுத்தவர் இறந்து கிடக்கக் காணப்பட்டதாகவும் விசாரணையில் தெரிவிக்கப்பட்டது.

கிருமிநாசினி அருந்தியதால் ஏற்பட்ட மரணம் என்று கூறிய மரணவிசாரணை அதிகாரி திரு. நா. இராசநாயகம் தற்கொலையெனத்தீர்ப்பளித்தார்.

——

## ஆஸ்பத்திரியில் வெள்ளம்

பதுளை, ஞாயிறு

பதுளையில் தொடர்ந்து பெய்த பெரு மழையினுல் பதுளை அரசாங்க ஆஸ்பத்திரியில் 3 அடிக்குமேல்வெள்ளம் பாய்ந்தது இதனுல் நோயாளிகளும் ஊழியர்களும் பெரிதும் பாதிக்கப்பட்டுள்ளனர்

மேற்படி ஆஸ்பத்திரியில் மேற்குப் பக்கத்திலுள்ள வாய்க்கால் அடைபட்டிருந்ததன் காரணமாகவே ஆஸ்பத்திரியில் வெள்ளப் பெருக்கு ஏற்பட்டதாகக் கூறப்படுகிறது

பதுளை-பண்டாரவளை வீதியில் கடும் மழை காரணமாக வாகனப் போக்குவரத்தும் தடைப்பட்டது. மழை தொடர்ந்து பெய்த வண்ணமேயிருப்பதால் வெள்ள அபாயம் ஏற்படலாம் எனத் தெரிகிறது.

# இன்றைய பலன்

சித்திரை மாதம் 21-ம் திகதி [4-5-70]

### சோதிடக்கலாநிதி திருமலை க, வேலுப்பிள்ளை

**மேஷம்**- அதிக ஆசையினுல் அவஸ்தைப்படுவீர்கள். சிலர் வழக்கு விவகாரங்களில் மாட்டிக்கொள்ளலாம். சிலரின் குறுக்குவழித் தலையீடு உங்கள் கோபத்தைக் கிளறிவிடும். அமைதி நன்று

**ரிஷபம்**- வார்த்தை ஜாலம் செய்வதன் மூலம் மற்றவர்களை வசீகரிப்பீர்கள்' எழுத்தாளர்களுக்கு சிறப்பான தினம். இருக்குமிடத்தில் ஆதரவு பெருகும். சிலருக்கு பொதுசனத் தலைமையும் கிடைக்கலாம்.

**மிதுனம்**- மனையில் பூசல்கள் தோன்றிமறையும் தனிமையை விரும்புவீர்கள் தொழில்புரியும் இடத்தில் கண்துடைப்பு வேலை நடைபெறும். நண்பர்களே சூழ்ச்சி வலை விரிப்பதற்கு முற்படுவார்கள்

**கடகம்**- நீண்டநாள் பிரச்னைக்கு இன்று நல்ல முடிவு ஏற்படும். தாய்வழிமூலம் தனவரவுக்கும் இடமுண்டு. சிலருக்கு அதிர்ஷ்டலாபங்களும் கிடைக்கலாம். முன்னேற்றமான தினம்.

**சிம்மம்**- புத்திரவழியால் புகழுக்கு இடமுண்டு. புதிய பாதையில் நடைபோடுவீர்கள். நண்பர்களிடமிருந்து உற்சாகமான வரவேற்புக் கிடைக்கும். குடும்பத்திலும் பிணைப்புகள் பலப்படும். பொதுவாக நல்லதினம்.

**கன்னி**- வெளியிடத்துப் பயணம் மேற்கொள்ளப்படலாம். உடல்நலத்தைப் பேணவும். எதிரிகளின் சூழ்ச்சிகள் பலமாக இருக்கும்

**துலாம்**- பிரிந்தவர்கள் வாழ்க்கையில் மீண்டும் இணைவர். குடும்பப் பிரச்னைகளில் சுமுகமான நிலை தென்படும்; சுற்ருடலிலும் வேண்டியதைச் சாதிக்கக் கூடிய செல்வாக்குப் பெருகும் இன்று பொன்நாள்.

**விருட்சிகம்**- வேண்டிய ஒருவரைப் பகைத்துக்கொள்ள நேரிடலாம். அவசரப்போக்கினுல் ஆபத்துக்கள் விளையும். சிலர் வாழ்க்கையில் பிரிவுத்துயர் வாட்டக்கூடும் சகோதரவழியாலும் சஞ்சலம் உண்டு.

**தனுசு**- மனம்போல் வாழ்வு இன்று மலரும். கடமையாற்றுமிடத்தில் சகதொழிலாளர்களின் ஒத்துழைப்புக் கிடைக்கும். சிலருக்கு பதவிஉயர்வுக்கும் இடமுண்டு முயற்சியால் முன்னேற்றமும் உண்டு.

**மகரம்**- புதுமையான எண்ணங்கள் தலைதூக்கும். தொழில்துறையில் புதிய சாதனை உருவாகும். கற்றவர்கள் ஆதரவு தப்பாமல் கிடைக்கும். இடமாற்றத்துக்கான வழிவகைகள் மேற்கொள்ளப்படலாம்.

**கும்பம்**- பொருளாதாரநிலை சீர் அடையும். சிலர் வாழ்க்கையில் எதிர்பாராத வரவுக்கும் இடமுண்டு, பத்திரிகையாளர்களின் வேதனம் உயர்த்தப்படலாம். வெளியூரிலிருந்து செய்தியும் கிடைக்கும்.

**மீனம்**- அற்பவிடயத்திற்கும் ஆத்திரம் அடைவீர். நெருங்கிய நண்பர் ஒருவரைப் பகைத்துக்கொள்ள நேரிடலாம். அடக்கம்வேண்டும்.

## மரண அறிவித்தல்

### நகுலேஸ்வரி

நீர்வேலி தெற்கைச் சேர்ந்த நகுலேஸ்வரி காலமாகிவிட்டார். இவர் பாலசிங்கத்தின் அன்பு மனைவியும் ச. வேலுப்பிள்ளை தங்கம்மா ஆகியோரின் அன்பு மகளும் கனகசபாபதி சந்திரா ஆகியோரின் அருமைச் சகோதரியும் முன்னுள் செனட்டர் ஜி. நல்லையாவின் மருமகளும் ஆவர். அன்னரின் பூதவுடல் கோப்பாய் வடக்கு சடையாக்களி மயானத்துக்கு இன்று பிற்பகல் 2 மணிக்கு அன்னரின்இல்லமாகிய பூதர்மடம் ஒழுங்கையில் உள்ள பவானி பவனத்தில் இருந்து எடுத்துச் செல்லப்படும். உற்ருர், உறவினர் நண்பர்கள் இவ்வறிவித்தலை ஏற்றுக்கொள்ளும்படி வேண்டுகிறேம், தனித்தனி அறிவிக்க முடியாமைக்கு வருந்துகின்றேம், வே அப்பையா (தம்பி) 2114

## தேர்தல்...

(1-ம் பககத் தொடர்சி]

முறையில் தேர்தல் மற்றும் சர்ச்சைகளிலீடு படுவோர்களை சமீபத்திலுள்ள பொலிஸ் நிலையங்களில் கொண்டுபோய் ஒப்படைக்கும்படி இ. போ. ஊழியர்களைப் பொலிஸ் அதிபர் கேட்டுள்ளார் இது தவிர இரகசியப் பொலிசாரும் பஸ்களில் பிரயாணம் செய்து இத்தகைய பேர்வழிகளின் நடத்தையைக் கண்காணிப்பர்.

## அரசியல் ஆசிரியர்கள்

ஆசிரியர்கள் சிலர் ஒரு வேட்பாளருக்காகத் தேர்தலில் ஈடுபட்டு வேலை செய்து வருவதாக வடபகுதியிலுள்ள ஒரு தொகுதியில் போட்டியிடும் வேட்பாளர் ஒருவர் பொலிசில் புகார் செய்திருக்கிருர். அந்த ஆசிரியர்களைப்பற்றிய விபரத்தைத் தெரிவித்தால் அவர்கள் பற்றி விசாரணை செய்யும்படி இரகசியப் பொலிஸ் பகுதிக்குத் தாம் அறிவிப்பதாகவும் அவர்கள் மேற்கொண்டு நடவடிக்கை எடுப்பதாகவும் பொலிஸ் அதிகாரிகள் அந்த வேட்பாளரிடம் தெரிவித்துள்ளாராம்.

## தேவை

கடைச்சல் வேலை, கம்மாலை வேலை வெல்டிங் வேலை (Cas & Electric) தெரிந்தவர்களும் மோள்டர் (Moulder) (F) விற்றர் (Fitter) வேலை தெரிந்தவர்களும் உடனே தேவை. நற்சாட்சிப்பத்திரங்களுடன் விண்ணப்பிக்கவும். விளம்பர இல. 2202, C/o 'ஈழநாடு', யாழ்ப்பாணம். 2202

## திருமண அழைப்பு

நிகழும் சாதாரண வருஷம் சித்திரை 25-ம் நாள் (8-5-70) வெள்ளிக்கிழமை காலை 8-00 — 10-00 மணி வரையுள்ள சுப முகூர்த்தத்தில் எமது புத்திரன் சண்முகராசாவுக்கும், எமது சிரேஷ்ட புத்திரி அமிர்தகணேசுவரிக்கும் மணமகள் இல்லத்தில் திருமணம் நடைபெறும். அத்தருணம் தாங்கள் சுற்றஞ்சூழ சமூகம் தந்து மணமக்களை ஆசீர்வதித்தேகுமாறு வேண்டுகின்றேம். க. அமிர்தலிங்கமும் பாரியாரும், ஆனைக்கோட்டை. த துரைசுவாமியும் பாரியாரும், சைவ மடம், தெல்லிப்பளை.

2201

## வியாபாரம்பெருக விளம்பரம் செய்க

இப்பத்திரிகை ஈழநாடு லிமிட்டெட்ஸ் ஸ்தாபனத்தாரால் யாழ்ப்பாணம் சிவன் கோவில் மேலை வீதி 63-ம் இலக்கத்திலுள்ள அவர்களது அச்சகத்தில் 1970 ம் ஆண்டு மே மாதம் 4-ம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org